Registered No. M-4483 Madras War Review (TAMIL) 28-4-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV 1944-ம் ௵ ஏப்ரல் ௴ 28௳, வெள்ளிக்கிழமை இதழ் 34

சபாங் தாக்குதலின் முக்கியத்துவம்

அட்மிரல் சர் ஜேம்ஸ் சோமர்வில்.

சென்ற வாரம் சுமத்ரா தீவைத் தாக்கிய தன் முக்கியத்துவம், அது முதன் முதலாகத் தாக்கப்பட்டது என்பதில் தான் அடங்கியிருக்கிறது. இப்போது கீழ்த் திசையிலும் தம் கண்ணோட்டத்தைச் செலுத்திக் கொண்டிருக்க வேண்டியது அவசிய மென்று ஜப்பானியர்கள் தெரிந்துகொண்டிருக்கக் கூடும். நேச நாட்டுக் கப்பற் படையைக் காண ஜப்பானியர்களுக்குச் சந்தர்ப்ப மில்லை. இந்தக் கப்பற் படையை நோக்கி வந்து கொண்டிருந்த மூன்று 'டார்பிடோ'க்கள், அணுகு முன்னதாகவே அழிக்கப்பட்டன.

அது ஒரு பல மிக்க கப்பற் படை. இந்தக் கப்பல்களில் ஒன்றை நியூசிலந்துக்காரர்கள், அமெரிக்கர்கள், பிரஞ்சுக்காரர்கள், டச்சுக்காரர்கள், பிரிட்டிஷ்காரர்கள் அனைவரும் சேர்ந்து நடத்தினார்கள்.

இந்தக் கடலிலுள்ள கப்பற் படை இந்துமகா சமுத்திரம் முழுதும் போய்த் தடைக் கப்பல்களை வேட்டையாடக் கூடிய அளவுக்கு ஆதிக்கம் பெற்றிருந்தன. இப்படி வேட்டையாடும்போது தான் இரண்டு ஜெர்மன் தடைக் கப்பல்கள் நாசபபடுத்தப் பட்டன.

சபாங் எண்ணெய் 'டாங்கி'கள் அழிக்கப்பட்டன; இதனால் உடனடியாக ஓரளவுக்கு எண்ணெய் நஷ்டம் ஏற்பட்டது. நாளடைவில், இது பெருங் கஷ்டத்திற்கு இடங் கொடுக்கும். ஏனென்றால், ஜப்பானிய எண்ணெய்க் கப்பல்களுடைய நிலைமை மிகவும் ஆபத்தாக விருக்கிறது. எண்ணெய்க் கிடங்குகள் இல்லாததனாலே, சபாங்கிலிருந்து எண்ணெயை வெளியேற்ற, எண்ணெய்க் கப்பல்களை அடிக்கடி உபயோகிக்கவேண்டி யிருக்கும்.

சபாங், ஜப்பானிய நீர்மூழ்கிக் கப்பல் தளம் மட்டுமல்ல. அது சிங்கப்பூருக்கு அரணாக அமைந்துள்ள ஜப்பானிய கேந்திர ஸ்தானம்.

அட்மிரல் சர் ஜேம்ஸ் சோமர்வில், கொழும்பில் 24-ம் தேதி கூறியது.

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
முகப்புப் படம் : அட்மிரல் சர் ஜேம்ஸ் சோமர்வில்.	1	சிறு கதை : ஹவில்தார் முருகன் வரழ்க்கைச் சரிதம்	5
சபாங் தாக்குதலின் முக்கியத்துவம்	1	ரஷ்யா மக்கள் வீரம்	7
முரசொலி	2	எப்பொழுது சிரிக்கலாம் ?	9
தலையங்கம் : பர்மியப் போர் நிலை	3	யுத்த நாட் குறிப்புக்கள்	12
போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	4		
பாட்டு : சுபேதார் சுப்பிரமணியம்	4		

மு ர செ ா லி

“விமானங்களைக் கொண்டு ஜெர்மனியை நாம் தொடர்ச்சியாகத் தாக்கிக் கொண்டிருக்கிறோம். நமது தாக்குதல் வேகம் அதிகப்பட்டுக் கொண்டும், எதிரிகளின் தடுக்கும் சக்தி குறைந்து கொண்டும் வருகிறது.”

—மிஸ்டர் ஹென்ரி ஸ்டிம்சன்,
அமெரிக்க யுத்த மந்திரி, எப்ரல் மாதம் 20-ம் தேதி லண்டனில் பத்திரிகைக்காரர்களிடம் கூறியது.

* * * *

“நடு நிலைமை நாடுகளின்றேந்து எதிரிகளுக்குப் போய்ச் சேரும் முக்கியமான யுத்த சப்ளைகளைப் பற்றிப் பிரிட்டிஷ் அரசாங்கம் மிகவும் கவனம் செலுத்தி வருகிறது. சம்மந்தப்பட்ட அரசாங்கங்களோடு விவாதிக்கப்பட்டும் வருகிறது.”

—மிஸ்டர் ரிச்சார்ட்லா,
பிரிட்டிஷ் மந்திரி, காமன்ஸ் சபையில் எப்ரல் மாதம் 19-ம் தேதி கூறியது.

* * * *

“யுத்தத்திற்காயினும் சரி, சமாதானத்திற்காயினும் சரி, நேச நாட்டினர் எந்தத் திட்டம் வகுத்தாலும் அதன்படி நடக்க ஆஸ்ட்ரேலியா இசையும்,”

—மிஸ்டர் ஜான் கர்ட்டின்,
ஆஸ்ட்ரேலியா முதன் மந்திரி, எப்ரல் மாதம் 19-ம் தேதி கூறியது.

* * * *

“ஐரோப்பாவில் 2-வது போர் முனை ஆரம்ப மாகும் போது பஸிபிக் மகா சமுத்திரத்திலும் பெரும் போர்கள் நடை பெறும். குறைந்த பட்சம் இன்னும் பல வருஷங்களுக்காவது யுத்தம் நடைபெறும் என்று எண்ணி அதற்குத் தக்கபடி திட்டமிட வேண்டும்.”

—டாக்டர் போர்டு,
ஆஸ்திரேலிய தரைப் படை மந்திரி, எப்ரல் மாதம் 21-ம் தேதி கூறியது.

* * * *

“தம் நாட்டில் போராடும்படி ஜெர்மானியர் விடவே மாட்டார்களென்று நான் நினைக்கிறேன். பிரிட்டிஷாரும் அமெரிக்கர்களும் ஜெர்மனியின் மேற்கு எல்லையை யடையும் போது, ரஷ்யர்களும் கிழக்கு எல்லைக்கு வந்து சேருவார்கள். அப்போது ஜெர்மனியின் பலம் நொறுங்கும். மேலும் போராட ஜெர்மனி மறுக்கும். இவை யெல்லாம், பிரிட்டிஷ் படைகளும் அமெரிக்கப் படைகளும், எதிரிகள் வயப்பட்டிருக்கும் நாடுகளை யெல்லாம் மீட்டு முழு பலத்தோடு எதிரியைத் தாக்கினல் தான் சாத்தியமாகும். இந்த தாக்குதல், இலகுவான தல்ல வென்ருலும், அதனல் ஜெர்மானியர்களுக்குப் படு நஷ்டம் ஏற்படுவது உறுதி. ஜெர்மனியில் உள் நாட்டிலேயே நாளுக்கு நாள் நிலைமை குலைந்து கொண்டும் விரைவில் சிதறிக் கொண்டும் வருவதற்கான சின்னங்கள் காணப்படுகின்றன. ஹிட்லருக்கு விரோதமான கருத்தோடிருந்த குற்றத்திற்காக 15 முதல் 30 பேர்கள், பொது மக்கள் கொல்லப்படுகிருர்கள்.

—டாக்டர் எட்வர்ட் பினேஷ்,
செக்கோஸ்லோவேகியத் தலைவர், லண்டனில் எப்ரல் மாதம் 22-ம் தேதி கூறியது.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1944-ம் ஆண்டு ஏப்ரல் மீ 28-உ, வெள்ளிக்கிழமை | இதழ் 34

பர்மியப் போர் நிலை

பர்மா போர் முனையில் இம்பால் ஒரு முக்கியமான ஸ்தானமாயிருக்கிறது. இது 700 சதுர மைல்கள் பரப்புள்ள சமவெளி. இதைச் சுற்றிலுமுள்ள மலைகள் சுமார் 5000 அடி உயரமுள்ளவை. இது நேச நாட்டினர் [illegible]ருக்கிறது. இதைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டு மென்பது ஜப்பா[illegible]கள் எண்ணம். இவர்கள், அதைச் சுற்றிலுமுள்ள மலைகளில் தங்கியிருக்கிறார்கள். இவர்கள் இம்பாலை முற்றுகையிட்டிருக்கிறார்கள் என்று கூடச் சொல்லலாம்; என்றாலும் அது பெயரளவில் தான் முற்றுகையாகும். இந்த மலைகளிலிருந்து சமவெளியில் இறங்கி, இம்பாலைப் பிடிக்க, ஜப்பானியப் படைகள் முயற்சித்தன. ஆனால், இந்த முயற்சி கொஞ்சங் கூட பலிக்கவில்லை. இதற்குக் காரணம் நேச நாடுகளின் உயரிய படைபலம் தான் என்பது சொல்லாமலே விளங்கும். இம்பாலுக்கு வடகிழக்கே ஓரிடத்தில் நேச தேசப் படைகள் தம் தளத்தை ஊன்றிக் கொண்டு மேலும் முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

மணிப்பூர் ரோடிலுள்ளதோர் முக்கியமான பட்டணம் கொஹிமா. இங்கே ஒரு நேச நாட்டுப் படை யிருந்தது. இதற்கு மணிப்பூர் ரோடு வழியாகத் தான் சப்ளைகளை வர வேண்டும். இந்தப் பாதையை ஜப்பானியர்கள் சேதப்படுத்தி விட்டார்கள். இதனால் கொஹிமா துண்டிக்கப்பட்டுவிட்டது. நேச நாட்டுப் படைகளின் ஒரு பகுதியை கௌளீகாரம் செய்து விட வேண்டு மென்பது ஜப்பானியர் ஆசை. அந்த ஆசையில் மண்ணைப் போட்டன நேச தேசப் படைகள். நாசஞ் செய்யப்பட்ட ரோடுகள் உடனுக்குடனே பழுது பார்க்கப்பட்டு சப்ளைகள் தடையில்லாமற் போய்க் கொண்டிருக்கின்றன. ஜப்பானியப் படைகள் ரோடின் இரு புரங்களிலுமுள்ள மலைக் காடுகளில் போய்த் தங்கிக் கொண்டிருக்கின்றன.

இவை பற்றி ஜப்பானிய வானொலிப் பிரசாரம் வெகுவிசித்திரமா யிருக்கிறது. அவை நம்மை மோசம் செய்பவை. அவற்றை நம்பி நாம் ஏதேனும் செய்தால், அது ஜப்பானியர்களுக்குத் தான் அனுகூலமாயிருக்கும். அவர்கள் தாம பல காரியங்களைச் சாதித்து விட்டதாகப் பொய்ப் பறை சாற்றுகிறார்கள்; டில்லியை நோக்கி, இந்தியாவிற்குள் நுழைந்து தம் படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன வென்று பொய் மூட்டைகளை அவிழ்க்கிறார்கள். இப்படிச் செய்வதால், பொது மக்களிடையே பெருங் குழப்பத்தையும் மனச் சோர்வையும் உண்டாக்கி விடக்கூடு மென்பது ஜப்பானியரது நினைப்பு. இதைக் கொண்டு இந்தியாவின் யுத்த முயற்சியைக் குறைத்துவிட முடியுமென்று நம்புகிறார்கள். அப்போது நம் படைகளின் போர்த் திறமை குறையு மென்றும், நமது படைத் தலைவர்கள் நிம்மதியா யிருந்து வகுத்த திட்டங்களைக் குலைத்துவிடக் கூடுமென்றும் நம்புகிறார்கள்.

ஜப்பானியப் போர் முறைகளுக்கும் ஜப்பானியப் பிரசாரத்திற்கும் ஒற்றுமை காணப்படுகிறது. எப்ரல் மாதம் 4-ம் தேதி செய்த வானொலிப் பிரசங்கத்தில் 17-வது இந்தியன் டிவிஷன் ப[illegible]யை அடியோடு அழித்துவிட்டதாகக் கூறினார்கள். இ[illegible] அவர்களுடைய நோக்கம் இன்னதென்று தெளி[illegible]கிறது. அதாவது இந்த டிவிஷன் படையை [illegible]ழித்து விடவேண்டு மென்பது தான், அவர்க[illegible]

நிற்க, கொஹிமாவை[illegible]த் தாம் கைப்பற்றி விட்டதாக எத்தனை முறை ஜப்பானியர்கள் பிரசாரம் செய்தார்கள்! ஆனால், அவர்கள் கொஹிமாவி னின்று விரட்டத்தான் பட்டார்கள். இவர்கள் இம்பாலையுங் கூடப் பிடித்து விட்டதாக வாய்ப்பறை சாற்றினார்கள். அதை அணுகக் கூட அவர்களால் இப்போது முடியவில்லை. இவற்றினின்று ஒரு உண்மை விளக்கமாகத் தெரிகிறது. அதாவது, 17-ம் படையை அழிப்பது, கொஹிமாவையும் இம்பாலையும் கைப்பற்றுவது ஆகியவை ஜப்பானியர்கள் வகுத்துள்ள திட்டத்தின் சில கட்டங்கள் என்று தெளிவாகத் தெரிகிறது. ஆனால், இந்தக் கட்டங்களெல்லாம் ஜப்பானியர்களுக்குக் கை கூடவில்லை. அவர்கள் தலை எடுக்க முடியாதபடி நேச நாட்டுப் படைகள் அடித்து வீழ்த்தி விட்டன. அவர்கள் நோக்கம் ஈடேறாது போனது ஒரு புரமிருக்க, அவர்கள் திரும்பிப் போவதும் அவர்களுக்குப் பெருங் கஷ்டமாயிருக்கும்.

எப்ரல் மாதம் 15-ம் தேதி ஜப்பானியப் பிரதம மந்திரி டோஜோ ஒரு வானொலிப் பிரசங்கம் செய்தார். அப்போது, "ஜப்பானியப் படைகள் எல்லைப்புரத்தைக் கடந்து இந்தியாவிற்குப் பிரவேசித்து, அடுத்தடுத்து பல தலை சிறந்த வெற்றிகளடைந்து வருகின்றன" வென்று கூறினார். இப்படி அவர் கூற வேண்டிய அவசியம் என்ன? தம் நேசர்களான அச்சு நாடுகளுக்குக் கண்ணைத் துடைக்கத் தான். இவ்வளவு தூரம் பீத்திக் கொண்டிருந்த ஜப்பானியர்கள் இப்போது என்ன சொல்லுகிறார்கள்? "இம்பாலில் நம் நிலைமை சாதகமாகத் தான் இருக்கிறது" என்று தான் சொல்லுகிறார்களே யொழிய, அதற்கு மேல் எதுவும் கூற அவர்களால் முடியவில்லை. அதோடு விட்டார்களா? அரக்கான் போர் முனையில், கலடான் பகுதியில் நேச நாட்டுப் படைகளைப் பிரமாதமாக அழித்து விட்டதாகக் கூறுகிறார்கள். இதுவும் "முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும் வித்தை தான் வடக்குப் போர் முனையினின்று தெற்குப் போர் முனைக்கு நம் கவனத்தை இதன் மூலம் ஈர்க்க அவர்கள் முயற்சிக்கிறார்கள். இவர்கள் தந்திரம் இங்கே பலிக்கா தென்பதற் அறிகுறியாகப் பல போர் முனைகளிலும் இவர்கள் படு தோல்விகளடைந்து வருகிறார்கள்.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

ரஷ்யர்களுக்கு வெற்றி மேல் வெற்றி. அதாவது, ஜெர்மனிக்கு அடுத்தடுத்து பல தோல்விகள். டிராஸ்போல், ஒடெசா, டார்னபோல், யால்டா முதலிய கேந்திர ஸ்தானங்கள் ரஷ்யர் வசமாயின. டினீஸ்டரின் கீழ் பகுதியில் பல இடங்களில் ரஷ்யர்கள் கிழக்கே யிருந்து மேற்கே கடந்து விட்டார்கள். ரஷ்யப் படைத் தலைவரான மார்ஷல் கோனியேப் தன் படைகளுக்குத் தேவையான பொருட்களை ரிப்னிட்ஸா, பால்டி வழியாகத் தருவித்துக்கொண்டு, ப்ரூத்தின் மத்தியப் பகுதி வழியே புகுந்து, சாரெத் ஆற்றைக் கடந்து கார்பேதிய மலை யடிவாரம் போய்ச் சேர்ந்து விட்டார். ப்ரூத்துக்கும் சாரத்துக்கும் இடையே யுள்ள ரயில்வேயில் டொரொஹாய், பொட்சானி என்னும் இரண்டு ஊர்கள் இருக்கின்றன. இவை பெரிதும் பயன்படக் கூடியவை. இவையும் ரஷ்யர் வசமாகி விட்டன. ரஷ்ய[illegible] படைகள் மேலும் தெற்கு நோக்[illegible] சென்று சேரத்தைக் கடந்து பஸ்கா[illegible] என்னுமிடத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். இதனால், ஜாஸ்ஸிக்கும் ட்ரான்சில்வேனியாவுக்கும் இடையே போய்க் கொண்டிருந்த ரயில்வே துண்டிக்கப்பட்டு விட்டது. ஜெஸ்ஸி பட்டணமே மூன்று திசைகளிலும் ஆபத்திற்குள்ளாகி யிருக்கிறது.

இவற்றால் நிலைமை வெகுவாக மாறி விட்டது. இதனால் உண்மையிலேயே ஜெர்மன் படைத் தலைவரான வான் க்ளீஸ்ட் நிலைமை மிகவும் மோசமாகி விட்டது. தம் ஆறும் படையையும் அதைச் சேர்ந்த ருமேனியப் படையையும் அவர் மீட்டு, ஏற்கெனவே ஆயத்தம் செய்து வைக்கப்பட்டிருக்கும் "காலெட்ஸ்" லைனுக்குக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். இப்படிச் செய்ய வேண்டுமானால், கார்பேதிய மலையடிவாரத்திற்கும் சாரெத் ஆற்றிற்கும் இடையே கோனியேப் படைகள் புகுந்து விடாதபடி காப்பாற்ற வேண்டும். ப்ரூத்துக்கும் டினீஸ்டருக்கும் இடையேயும் நுழைய ஒட்டாதபடி தடுக்க வேண்டும். இல்லா விட்டால் கிஷினியேபுக்கு பெரும் ஆபத்து ஏற்படக் கூடும். அதே சமயத்தில் மற்றொரு ரஷ்யப் படைத் தலைவரான மலினோப்ஸ்கி, பின் வாங்கிப் போகும் ஜெர்மன் படைகளை விரட்டிக் கொண்டு தொடராதபடி தடுக்கவும் வேண்டும்.

ஆபத்துக்கள்

காலெட்ஸ் லைன் என்பது பொஸ்கானிக்கும் காலெட்ஸுக்கும் இடையி லிருப்பது. இதை ரஷ்யர்கள் கைப்பற்றிக் கொண்டார்களானால், புகாரெஸ்டுக்குப் பெரும் ஆபத்து நேரும். [illegible]ரோயெஸ்டி எண்ணெய்[illegible] மத்திய ருமேனிய[illegible] திண்டாட்டத்திற்[illegible]ும். கிழக்கே டிராஸ்[illegible] ரஷ்யப் படைகளால், வட[illegible] 35 மைல்கள் தூரத்திலுள்ள கிஷினேபுக்கு மட்டு மன்றி, காலெட்ஸுக்கும் பெரும் ஆபத்தா யிருக்கிறார்கள். அன்றியும் வடக்கே பஸ்கானியி லிருந்து கொண்டு போஸ்கானிக்குப் பெரும் ஆபத்தாயிருக்கிறார்கள். பஸ்கானியி லிருந்து, ரோமன், பாகோ என்னும் ஊர்களின் வழியாய் போஸ்கானுக்கு ஒரு ரயில் பாதைப் போகிறது. இதன் வழியாகத் தான் கோனியேப் தன் படைகளை வெகு வேகமாகக் கொண்டு செல்லுகிறார்.

இவருடைய போக்கைத் தடுக்க வான் க்ளீஸ்ட் தன்னாலானவரை முயற்சிக்க வேண்டும். அன்றியும் டான்யூப் ஆற்றின் டெல்டாவிலுள்ள சதுப்பு நிலத்தைத் தன் படைகளுக்கு ஒரு பாதுகாப்பாகக் கொள்ள வேண்டும். ரஷ்யர்கள் இதை நன்கு உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே தான், அவர்கள் கவன மெல்லாம் செபெஸ்டபோல் மீது பாய்ந்தது. அதை இப்போது சூழ்ந்து கொண்டு விட்டார்கள். அந்த ஊர் இப்போது தீக்கிரையாகி யிருக்கிறது. இதைக் கைப்பற்றிய பிறகு, கடல் வழியாகத் தம் படைகளைக் கொண்டுபோய் இறக்கி, பொஸ்கானி-காலெட்ஸ் லைனைத் தாக்கக் கூடும்.

மத்திய ருமேனியாவை நேர்முகமாகத் தாக்கத் திட்டம் போட்டிருக்கலாம். இதை கொண்டு பொஸ்கானி-காலெட்ஸ் லைனில் ஜெர்மன் பலம் சிதைந்து விடுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை.

ஏப்ரல் மாதம் 5-ம் தேதி ருமேனியப் பத்திரிகா நிருபர் ஒருவர் வான் ரிப்பன்ட்ராப்பை பேட்டிகண்டு பேசிய போது, 'ருமேனியாவைக் கைவிட்டுவிடுவதாக ஜெர்மனி எண்ணி இருக்கிறது' என்னும் கருத்தையே வெகுவாகக் கண்டித்துக் கூறியதாவது :—

"நாம் பெர்லினைக் கைவிட்டாலும் விடுவோம்; ருமேனிய நாட்டைத் தம் சொந்த நாடுபோலக் கருதி ஜெர்மன் படையினர் காப்பார்கள்",

என்று கூறினர். ருமேனியாவிலுள்ள ப்ளோயெஸ்டி எண்ணெய்க் கிணறுகள் அவ்வளவு முக்கியமானவை. அவற்றை ஜெர்மனியர்கள் இழந்தால் சிறகொடிந்த பறவை தான் அவர்களும். ஆகவே, காலெட்ஸ் கணவாயைத் தகுந்தபடி அரண் செய்து கொள்ள வான் க்ளீஸ்ட் அரும்பாடு படக்கூடும். அவர்கள் அப்படிச் செய்தால், கரையோரமாயுள்ள பகுதிகள் வழியாகப் போய், கார்பேதியா ஊடே முன்னேறி ருமேனியாவையும் ஆஸ்திரேலியாவையும் ரஷ்யர்கள் வளைந்து கொள்ளக் கூடும்.

சுபேதார் சுப்ரமண்யம்!

"சொற்பன வாழ்வில்" என்று பாகவதர் பாடும் மெட்டு.

சுபேதார் சுப்பிரமணியம்.

பல்லவி.

விற்பன வீரர் இறந்தார்—சுப்ரமண்ய சுபேதார் உயிர் துறந்தார்—அந்தோ
நிர்ப்பயமாய் போர்க் களத்தே—நிமிர்ந்து ஜர்மன் அற்பர்களை யழித்தே (வி)

சரணங்கள்.

காசினோ போர் முனையில்—கடும்போர்
மாசிலா தேசெய்தார் அந்தோ—பகைவர்
வீசின குண்டுகளால் ஒரு பொழுதும்
வெருண்ட பயம் அறியார் (வி)

அந்தோ அங்கொருநாள்—புதைந்திருந்த
அதிர்வெடியால் எதிர்சேர் நம்—படை
சிந்திச் சிதறி டாமல்—காத்தே தன்னுயிர்த்
த்யாகமும் செய்தனரே (வி)

K.M.B.

சிறு கதை

ஹவில்தார் முருகன் வாழ்க்கைச் சரிதம்

இராணுவ வாழ்க்கையின் சிறந்த எண்ணங்கள்

("கோவை கிழார்" எழுதியது)

"ஐயோ அப்பா, ஐயோ அப்பா, ஊ ஊ ஊ" என்று கத்திக்கொண்டு அழுதான் முருகன். அவன் தமயன் அவனை இரண்டு மூன்று அடி ஓங்கி அடித்தான். "ஐயோ, அப்பப்பா, அடிக்கிருனே, அப்பா நீ கேட்க மாட்டாயா? நான் என்ன தப்பு செய்து விட்டேன். சித்தி, நீயும் கேட்கமாட்டாயா, ஐயையோ, ஊ. ஊ..ஊ" என்று மறுபடியும் ஓங்கி கத்தினன் முருகன்.

"என்ன, அப்பாவா, தடிப்பயல்," என்று சொல்லி மற்றொரு அடி அடித்தான் கந்தன்.

முருகனுடைய அழுகையைக் கேட்ட தகப்பனர் வந்தார். "கந்தா, ஏன் உன் தம்பியை இப்படி அடிக்கிருய். நல்ல வார்த்தைச் சொல்லக் கூடாதா. அடிக்கவா வேண்டும்" என்ருர்.

"அப்பா, உனக்குத் தெரியாது. அடிக்கடி வீட்டை விட்டு ஓடி விடுகிருன். அவன் படிப்பதே இடையாது" என்ருன் கந்தன்.

சித்தியும் வந்தாள். "முருகன் அப்படித் தான், ரொம்பக் கெட்டு விட்டான். வீட்டில் இருப்பதே இல்லை. இரண்டடி போட்டால் தான் புத்தி வரும்" என்ருள்.

"நானு படிப்பதில்லை! என் உபாத்தியாயரைக் கேளு. நான் எங்கே விளையாடினேன்? பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் தான் விளையாடச் சொல்லுகிருர். மற்ற பையன்கள் விளையாடுவதில்லையா? என்னை மாத்திரம் ஏன் அடிக்க வேணுமோ" என்று சொல்லி அழுதான். பெற்ருேர்கள் வந்திடவே, அடியும் நின்றது. அழுகையும் சிறிது நேரத்தில் நின்றது.

ஆனல் இவ்விதக் காட்சிகள் முருகனுடைய இளமை வாழ்வில் அடிக்கடி நடந்து வந்தன. முருகனும் பொறுத்துக் கொண்டே வந்தான்.

மாற்ருந்தாய் கொடுமை

திருவாளர் கண்ணப்ப முதலியாருக்கு முதல் மனைவியிடம் கந்தனும் முருகனும் பிறந்தவர்கள். முதல் மனைவி இறந்து போனதும், சுந்தரம்மாளை இரண்டாவது தாரமாக மணந்து கொண்டார். சுந்தரம்மாளுக்கு மக்கட்பேறு இல்லை. குழந்தைகள் என்ருல் வெறுப்பு. மாற்ருள் குழந்தைகள் என்ருல் சொல்லவும் வேண்டுமோ? அவர்களின் மீது யாதாவது ஒரு குற்றம் சுமத்திக் கொண்டே இருப்பாள். இருவர் மீதும் சதா குற்றம் சுமத்த வழியில்லாமல் போய், ஒருவனை ஒருவன் மீது தூண்டி விடுவாள். கந்தனுக்கு வயது 18 இருக்கும். முருகனுக்கு வயது 10 இருக்கும். கந்தனைத் தூண்டிவிட்டு, முருகன் மீது ஏதோ சாக்குச் சொல்லி அவனை அடிக்கச் செய்வாள். கந்தனே, 'தான் பெரியவன், தன் தம்பியைத் திருத்துவதற்கு தனக்கு அதிகாரம் உண்டு' என்று பெருமிதம் கொண்டு அவள் சொற்படி அதிகாரம் செலுத்துவான். தகப்பனரோ வயது தளர்ந்தவர். நோய்வாயில் பட்டவர். ஆகவே குடும்பச் சச்சரவுகளை அடக்கச் சக்தியற்றவர். சுந்தரம்மாள் சொற்படி குடும்ப கோஷம் நடந்து வந்தது.

மேலே சொன்ன அடிதடி ஏற்பட்ட பிறகு மீண்டும் மீண்டும் அதே சச்சரவு ஏற்பட்டது. முருகன் தன் தமயனுடைய கொடுங்கோலாலும் சிற்றன்னையின் அழுக்காற்றிலும் சிக்கி உளைந்து உலக வாழ்வை வெறுத்து வந்தான். தன்னைப் பெற்ற அன்னையின் படத்தை அடிக்கடிப் பார்த்துப் பார்த்துக் கண்ணீர் உகுப்பான். உலகில் தன்னைப் பாதுகாக்கும் வள்ளல் யாரும் இருக்கமாட்டார்களா என்று எண்ணி எண்ணி வருந்துவான்.

கந்தன் கலியாணத்திற்குப் பின்

இரண்டு வருடங்கள் கழிந்தன. கந்தனுக்குத் திருமணம் நடந்தது. அவனுக்கு வாழ்க்கைப்பட்ட பெண்மணி ஒரு உத்தமி. வயது 14 தான் இருக்கும். அவள் பெயர் வள்ளியம்மை. அந்த அம்மையோ முருகன் மீது மிகுந்த அன்பு வைத்து அவனுக்கு வேண்டிய போது உணவு முதலியவைகளை ஊட்டி வந்தாள். இதனைக் கண்டதும், சுந்தரம்மாளுக்குப் பொறுக்க வில்லை. தன் நாட்டுப் பெண்ணைச் சில சமயங்களில் கடிந்து வருவாள். கந்தனே சுந்தரம்மாள் போதனைக்குள் வீழ்ந்தவன், அதை விட்டு மேலே ஏறவே இல்லை.

இப்படி இருக்கையில் ஒரு நாள் முருகன் பாடசாலைக்குச் சென்றவன் பந்து விளையாட்டில் சோந்து ஆடினதினல் வீடு வரத் தாமதம் ஆய்விட்டது. அவன் கட்சி வென்றதினல், ஒரு சாலை மாணவர்கள் கூட்டம் கூடி, முருகனுக்கு வந்தனேபசாரம் நடத்தினர்கள். முருகன் வீடு வந்து சேர மாலை 7-30 மணி ஆகிவிட்டது. சுந்தரம்மாளுக்கோ இக் குற்றம் மிகப் பெரிதாகத் தோன்றிற்று. கந்தனைக் கூப்பிட்டு அவனைத் தண்டிக்கச் சொன்னுள். கந்தனுக்கு இவ்வதிகாரம் கொடுக்கப்படவே, உச்சி குளிர்ந்து விட்டது. ஒரு கசையை எடுத்துக் கொண்டு முருகனை அடி அடி என்று அடிக்கத் தொடங்கினன். மிகவும் மகிழ்ச்சியுடன் வீட்டிற்குத் திரும்பினவுடனே இந்த விதமான பிரம்புப் பிரயோகம் கிடைக்கவே, முருகனுடைய நெஞ்சு எவ்வாறு துடிக்கும். அடி பொறுக்க முடியாமல் "ஐயோ, அப்பா" என்று கத்திக் கொண்டு தரையில் விழுந்தான். அப்போது தகப்பனர் வீட்டில் இல்லை. இருந்தாலும் என்ன பயன். சுந்தரம்மாள் அதிகாரம் அல்லவா?

"இனி வீட்டிற்கு பள்ளிக்கூடம் விட்டவுடனே வரும்படி இவனுக்கு புத்தி கற்பிக்க வேண்டும், கந்தா, இவனை இந்தத் தூணில் கட்டிவிடு" என்று கத்தினுள். அப்போது சமையலறையில் இருந்த வள்ளி வெளியே வந்து, "பாவம், பாவம், மாமீ, குழந்தையை இப்படி அடிப்பானேன்! நல்ல பையனுச்சே!" என்று பரிந்து பேசினுள்.

"என்னடி! கள்ளி, உனக்கு என்ன வந்தது! அவன் உன்னை மயக்கி விட்டானே: உள்ளே போடி என்று கத்தி வெருட்டினுள். அதனைப் பொருது உள்ளே சென்று விட்டாள் வள்ளியம்மை.

கந்தன் உடனே ஒரு தாம்புக் கயிறு எடுத்து முருகனை ஒரு தூணில் கட்டி விட்டு, வெகு கம்பீரத்தோடு ஒரு நாற்காலியில் அமர்ந்து முருகன் அழுவதைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தான். பாவம், முருகன் கட்டுண்டபடியே தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தான்.

சிறிது நேரத்தில் பெரிய வெற்றி அடைந்தவன் போல் எண்ணிக் கொண்டு, கந்தன் எழுந்து போய் விட்டான். விம்மிக் கொண்டிருந்த முருகன் அடிபட்ட களைப்பினல் அயர்ந்து தூங்கி விட்டான். அவனுடைய நிலைமையை அதற்குப் பிந்தி வீட்டில் யாரும் கவனிக்கவே இல்லை. வள்ளியம்மையோ இதனைக் கண்டு, ஆருத் துயரத்தில் ஆழ்ந்தாள். வீட்டில் அமைதி ஏற்பட்டவுடன், காலடி படாமல் மெல்ல நடந்து முருகனிடம் வந்தாள். முருகனைக் கட்டியிருந்த கட்டுக்களை அவிழ்த்து அவனை எழுப்பி அன்று படைத்திருந்த தளிகையும் பாலும் தந்தாள் மிகுந்த பசியோடிருந்த முருகன் அதனை உடகொண்டு, தன்னைக் காப்பாற்ற வந்த தன் அருமைத் தாய் எனவே அவளை மதித்தான். அவனை படுத்துக் கொள்ளச் சொல்லி விட்டு, வள்ளி தன் அறைக்குச் சென்ருள்.

முருகன் வெளி யேற்றம்

முருகனுக்கோ தூக்கம் வரவில்லை. சமீபத்தில் திருமணம் ஆகித் தன் குடும்பத்திற்கு வந்த தன் அண்ணியின் எதிரிலே தன் அண்ணன் இரக்கமில்லாது ஒரு பாவமும் அறியாத தன்னை அடித்தானே; இந்த அவமானத்தை எவ்வாறு பொறுப்பது? மானம் உடையவன் இந்த வீட்டில் இனி இருப்பானு? தகப்பனும் சிற்றன்னையும் பகைவர் ஆகி விட்டார்களே, இந்தத் தீரா இடும்பை வாழ்வை விட

வீட்டை விட்டு அகல்வதே மேல் என்று எண்ணினான். "கொடுங்கோல் மன்னர் வாழு நாட்டில், கடும் புலி வாழும் காடு நன்றே" என்று தான் பள்ளியில் வாசித்த உறுதி மொழி, அவன் நினைவிற்கு வந்தது. உடனே ஒரே உறுதியுடன் வீட்டைத் துறந்து செல்ல எண்ணினான். எங்கே போவது என்று கூட எண்ணினான் இல்லை. இரவில் நடு நிசியில் வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு மானம் பொறுக்காது முருகன் வெளியேறினான்.

மறு நாட் காலையில் வீட்டில் ஒரே அமர்க்களம். முருகனைக் காணவில்லை. அடி பொறுக்காமல் வெளியே ஓடிவிட்டான் என்று எல்லோரும் அறிந்தார்கள். "சிறு பையன் எங்கே போய்விடுவான்; பசி யெடுத்ததும் வந்து விடுவான்" என்று சமாதானப் படுத்தி விட்டாள் சிற்றன்னை. ஆகவே அவனைத் தேட எவரும் முயற்சிக்க வில்லை. இரண்டாவது நாளும் முருகன் வரவில்லை. பள்ளி உபாத்தியாயரும் முருகன் என் வரவில்லை என்று விசாரித்தார். பிறகு தான் பெற்றோர்கள் ஊரில் விசாரிக்கத் தொடங்கினர். உளவு தெரியவில்லை. அக்கம் பக்கத்தார் சிற்றன்னையின் கொடுமையினாலே ஒரு நல்ல பிள்ளை துறத்தப்பட்டான் எனப் பழிக்கத் தொடங்கினர். என்ன முயன்றும் பிள்ளையைக் காணவில்லை. தகப்பனாருக்கு நோய் அதிகம் ஆகி விட்டது. சில நாட்களில் இறந்தார்.

நெஞ்சறிவுறுத்தல்

கந்தன் பச்சாதாபப் பட்டான். தன் கொடிய செயல்களால் தன் அருமைத் தம்பியை இழந்தேனே என்று வருந்தினான். ஆனால் எல்லாரினும் உண்மையாகத் துயரப் பட்டவள் வள்ளியம்மை தான். இரவும் பகலும் அவனுடைய அழகிய முகமே அவள் முன் நின்று கொண்டிருக்கும், ஒரு பாவமும் மறியாத இளஞ் சிறுவன் எவ்வாறு வருந்துகிறானோ என்று எண்ணி எண்ணி துக்கிப்பாள்.

பச்சாதாபப்பட்டுப் பயன் என்ன ?

சில ஆண்டுகள் சென்றன. முருகனுடைய ஞாபகம் கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கியது. கந்தனுடைய குடும்ப நிலையும் வாடத் தொடங்கியது. சுந்தரம்மாள் நோய் வாய்ப் பட்டாள். முருகனைப் பற்றி அவள் ஒரு வித இரக்கமும் இல்லாத கடிய நெஞ்சத்தவள். அவள் இறந்த போது அவளைப் பற்றித் துக்கிப்பார் எவரும் இல்லை. அந்தப் பிசாசு இறந்த பிறகு தான், கந்தன் சிறிது தெளிவு அடைந்தான். தம்பியைத் துரத்தி விட்டதே தான் சீர் கெட்டதற்குக் காரணம் என்று எண்ணத் தொடங்கினான். வள்ளியம்மையின் கருத்தும் அதுவே. இனி பச்சாத்தாபப் பட்டு என்ன பயன் ?

இப்படி யிருக்கையில் உலகப் போர் தொடங்கியது. கந்தனுடைய குடும்ப நிலை மேலும் கேவலம் அடைந்தது. துன்பம் வருங்காலத்தில் தானே புத்தி தெளிவடைகிறது. கலிகாலத்தையும் தன் தலை விதியையும் நொந்து கொண்டு காலம் கழித்து வந்தான் கந்தன்.

அண்ணிக்கு அனுப்பிய அன்பு நிதி

பெரும் போர் தொடங்கி மூன்று ஆண்டுகள் ஆயின. வள்ளியம்மாள் தன் கைக் குழந்தைக்கு பால் கொடுத்துக் கொண்டு தெருத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். எதிரே ஒரு தபால் சேவகன் வந்தான். "கந்தசாமி முதலியார் மனைவி வள்ளியம்மாள் யார்" என்று கேட்டான். "என்ன வேண்டும் ? நான் தான்" என்றாள் வள்ளியம்மாள். "தங்களுக்கு இன்ஷ்யூரன்சு கடிதம் வந்திருக்கிறது, கையெழுத்து செய்து பெற்றுக்கொள்ளுங்கள்" என்றான். வள்ளியம்மாளுக்கு ஒன்றும் தோன்றவில்லை. தனக்கு யார் இன்ஷ்யூர் கடிதம் அனுப்பியிருக்கக் கூடும் என்று எண்ணினாள். பிறகு கையெழுத்து செய்து கடிதத்தைப் பெற்றுக் கொண்டாள். தபால் காரனும் வெகுமதி பெற்றுக் கொண்டு சென்றான். பிறகு கடிதத்தை உடைத்து உள்ளே அடங்கி யிருந்தவைகளைப் பிரித்துப் படித்தாள்.

அதில் ஒரு நீண்ட கடிதமும் 1,250 ரூபாய்க்கு ஒரு செக்கும் இருந்தன. வள்ளியம்மாள் எதிர்பாராத ஒரு புதையல் கண்டவளைப் போலத் திகைத்தாள், அவள் அடைந்த வியப்பிற்கு அளவே இல்லை. தன் கண்களையும் நம்பாமல் கடிதங்களை திருப்பித் திருப்பிப் பார்த்தாள். தன் விலாசம் சரியாக இருப்பதையும் கண்டாள். பிறகு ஒருவாறு மனதைத் தேறுதல் செய்து கொண்டு கடிதத்தைப் படித்தாள்.

முருகவேள் முதலியார், போர்க்களம்.
8-ம்படை ஹவில்தார்.
வைத்திய நிலையம். 4-5-41.

கருணைக் கடலாகிய எனது அண்ணியார் வள்ளியம்மையாருக்கு முருகன் தாழ்ந்த வணக்கத்துடன் எழுதிய நிருபம் :

என் அருமைத் தாயைக் கண்டு மகிழும் பாக்கியம் பெறாத அபாக்கியன் நான். தாயில்லாக் குழந்தையைப் பாதுகாத்து வளர்த்த கடவுள் போல் நீங்கள் இருந்தீர்கள். என் தமயனும் சிற்றன்னையும் என்னைக் கொடுமையாக நடத்திய காலத்தில், வாடி வருந்தும் நெற் பயிருக்கு, சிறு மழை எவ்வாறு ஆறுதல் அளிக்குமோ, அவ்வாறு உங்களுடைய கருணை நோக்கமும் வாக்கும் எனக்கு இருந்தன. இறுதியில் என் சிற்றன்னையின் பேச்சைக் கேட்டு, என் அண்ணன் என்னை அடித்து கம்பத்திற் கட்டியபோது, நீங்கள் என்னை விடுவித்து உயிர் தந்தீர்கள். மானம் பொறுக்காது அன்று இரவே வீட்டை விட்டு அகன்றேன். என்னைத் திரும்பி அழைப்பார் இல்லை. பல இடங்களில் சுற்றினேன். "உலகத்துள்ள அறியாப் பிள்ளை இந்தப் பாழும் உலகில் எவ்வாறு சீவிக்க முடியும்? பிச்சை எடுத்தும் அடிபட்டும் கூலிவேலை செய்தும் உயிர் கடத்தி வந்தேன். பல தொழில்களில் ஈடுபட்டேன். என் துயரத்தை யாரிடம் சொல்வது ? என் அன்னையின் உருவப் படத்தினிடமும் நடராசப் பெருமானிடமும் முருகக் கடவுளிடமே என் குறைகளைக் கூறி அழுவேன். இறுதியில் உலகப் போர் வந்தது. இராணுவத்தில் சேர்ந்து பிழைக்கலாம் என்று சேர்ந்தேன். அப்போது தான், என் வாழ்வில் நிம்மதி ஏற்பட்டது. என் படையில் எல்லோரும் தமிழ் மக்கள். மிகுந்த அன்போடு என்னை நடத்தினார்கள். படைத் தலைவர் ஒரு சிறந்த தமிழர். அவரிடம் தமிழ்த் தாயின் சிறந்த மகனின் தன்மையைக் கண்டேன்.

"உடன் பிறவா மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்" என்ற ஒளவையார் வாக்கை தமிழ்ப் படையில் தான் கண்டேன். போரில் பல விருதுகளைப் பெற்றேன். என்னை நமது நாட்டினர் மதித்தார்கள். என்னிடம் மீதியுள்ள பொருளை என்ன செய்யலாம் என்று எண்ணிய காலமும் உண்டு. இப்படியாயிருக்க, சில நாட்களுக்கு முந்தி என் படை போர் புரிகையில், தற்செயலாக என் அருகில் ஒரு வெடிகுண்டு விழுந்து எனக்கு அபாயமான காயங்கள் ஏற்பட்டன. என்னை வைத்திய நிலையத்தில் வைத்தார்கள். சிகிச்சை அனுகூலம் ஆகாது என்று வைத்தியர்கள் கைவிட்டு விட்டார்கள். அப்போது தான் என் பணத்தை என்ன செய்வது என்று எண்ணினேன். என் மீது கருணை காட்டின உங்கள் ஞாபகம் தான் எனக்கு முதலில் வந்தது. உலகம் முழுதும் இருண்டு கிடந்த நாளில், அதில் ஒரு மின்னல் போல உங்கள் கருணை மொழியே என் உயிரைக் காப்பாற்றியது. ஆகவே நான் சேமித்த தொகையில் 1,250 ரூபாய் உங்களுக்குத் தரும்படி என் படைத் தலைவரிடம் கொடுத்துள்ளேன். மற்றொரு 1,250-யும் என் பாடசாலையின் நிதிக்காகத் தருகிறேன். எனக்குப் படிப்பு தந்த உபாத்தியாயர் இருக்கிறாரோ இல்லையோ. அவர் தான் எனது உண்மைத் தகப்பனார். உலகிலே இவ்விருவரைத் தவிர மற்ற எவரையும் நான் எண்ண வில்லை. மற்றொரு 1,250-ம் என்னுடன் உழைத்து வரும் தமிழ்ப் போர் வீரர்களுக்குக் கொடுத்துள்ளேன். பாக்கித் தொகை என் அடக்கச் செலவாகும்.

அண்ணியாரே ! மறுபடியும் எனது வணக்கம். தொகை சிறிதாயினும் அன்புடன் அளிக்கப்பட்டது. நீங்களும் உங்களுக்குக் குழந்தைகள் இருந்தால் அவர்களும் இதனை அடைவீர்களாக !

இப்போது எனக்கு எழுதச் சக்தி இல்லாததினால் எனக்காக எனது சகோதர வீரர் ஒருவர் இக்கடிதம் எழுதியிருக்கிறார். அறிகுறிக்காக என் கை விரல் அடையாளம் என் இரத்தத்தினால், வைத்திருக்கிறேன். சுபம், சுபம், சுபம்.

(இந்தக்குறி).

இதனைப் படித்தவுடன் வள்ளியம்மையின் கண்ணிலிருந்து நீர் ஆறுய்ப் பெருகிற்று. என்னே, நன்று செயக் கூடிய அரும் பெரும் செயல்! திருவருள் கூட்டி வைக்கும் வியப்பான முறையை எவரே அழிக்க வல்லார் !



ரஷ்ய வீரர்களின் வெற்றி விமானம்.

ரஷ்யா மக்கள் வீரம்

ஆண்களும் பெண்களும் அறப் போராடினர்

தொழிலாளர்களின் தீவிர முயற்சி

(மிஸ்டர் கே. எம். பாலசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.)

உலகம் தோன்றிய நாள் தொட்டு, இது வரை நடந்து வந்துள்ள யுத்தங்கள் எல்லாவற்றுள்ளும், தற்போது நடக்கும் இந்த யுத்தம் மிகப் பெரிது, மிகக் கொடிது, மிகவும் பயங்கரமானது. ஏறக்குறைய உலக தேசங்கள் அனைத்தும் இதில் ஏதாவதொரு விதத்தில் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்பதோடு, இதற்குக் காரணமாயுள்ள ஜெர்மன் தேசமும் அதன் தலைவன் ஹிட்லரும், இது வரை உலக சரித்திரத்தில் எங்கும் கண்டிராத அளவு கொடூரமும் பலமும், கொடிய மனப்பான்மையும் கொண்டவராயுள்ளனர் என்பதும் தான், அதற்குக் காரணம். இவ்வாறு, தான்தோன்றித் தம்பிரானாய்த் திரிந்த ஹிட்லருக்கு வீழ்ச்சியை உண்டாக்கி, அவனது படைகளை விரட்டியடித்து, வீறிட்டு நின்று போரிட்டு வென்ற வீரர்கள் நிறைந்தது ருஷ்யா தேசம் என்பதை, இன்று அறியாத மனிதன் எங்கும் இருக்க முடியாது.

“ உடும்பு ; வேண்டாம் கை வந்தால் போதும் ”

1941-வது வருஷம் ஜூன் மாதம் 22-ம் தேதி திடீரென ருஷ்யா தேசத்தின் மீது நாசியர் படை யெடுத்தனர். அன்றையத் தினமே ஹிட்லரின் அழிவு காலமும் ஆரம்பமாகி விட்டது. அவ்வாறு அவன் ருஷ்யாவிற்குள் வைத்த காலடி, தனது சவக் குழியில் வைத்த காலடியாகவே மாறிவிட்டது. ‘ நாசம் வந்துற்றபோது நல்லதோர் பகையைப் பெற்றேன்’ என்று இராமனைப் பற்றி. இராவணன் கூறியது, ஹிட்லரின் விஷயத்தில் மிகப் பொருத்தம் உடையதாகி விட்டது. ருஷ்யா வென்னும் வீரசாகரத்தில் ஆழம் தெரியாமல் காலை விட்ட ஹிட்லர், ஆழ்ந்து மடியலானான். ருஷ்யாவான உடும்பைப் பிடிக்கப் போன ஹிட்லர், ‘ உடும்பு வேண்டாம் ; கைவந்தால் போதும் என்று உதறிப் பதறியும் உடும்பு அவனை விடவில்லை.’ ஆக்கம் கருதி, முதல் இழந்த அறிவிலியாகிய ஹிட்லர், இன்று ஊக்கம் இழந்து, உய்வழி நைந்து ஏக்கம் பிடித்து நிற்கின்றான் என்றால், அதற்கு மூல காரணம், ருஷ்ய வீரரின் போர்த்திறனும், ஸ்டாலின் என்பாரின் சாமர்த்தியமுமே யாகும்.

தூங்கிய சிங்கம் வீறு கொண்டது

தூங்கிக் கொண்டிருந்த ருஷ்யச் சிங்கம், அகம்பாவம் பிடித்த ஹிட்லரால் எழுப்பப்பட்டது. முதலில் கொஞ்சம் காயமும் உண்டாக்கப்பட்டு விட்டது. அதுவும் ஒரு நல்லதுக்கே தான். ஆனால், அதோடு அது காயமும் அடைந்து விட்டதுவோ, பின் அதன் கடூரத் தோற்றத்தையும் காய்ந்தெறியும் மூர்க்கத்தையும் யாராலும் கட்டுப்படுத்த முடியாது. ஏறக்குறைய 82 லக்ஷம் சதுர மைல் விஸ்தீரணமுள்ள ரஷ்ய தேசத்தில், சுமார் 20 கோடி மக்கள் வாழ்கின்றனர். இவர்களது களங்கமற்ற, களி மிகுந்த வாழ்க்கைத் திட்டமும், கட்டாயப் போர்ப் பயிற்சித் திட்டமும், இவர்கள் எல்லோரையும் உண்மை வீரராக இயற்கையாகவே செய்துள்ளன. ஐந்து வருஷத் திட்டங்களின் பயனாக, அளவுகடந்த யந்திரப் பெருக்கமும், கைத்தொழில் அபிவிருத்தியும் கூட்டு விவசாயம் போன்ற பல நன்மைகளும், ஓங்கி வந்துள்ளன ருஷ்யாவில். தமது பொது வுடமைத் திட்டத்தைப் பாதுகாக்க, ருஷ்ய தேசம் முதலிலிருந்தே தனது படைகளையும் ஆயுதங்களையும் படைப் பயிற்சியையும் இடைவிடாது அபிவிருத்தி செய்து வந்துள்ளது. இவ்வாறு, பலவிதத்திலும் ருஷ்யாவானது,

‘ படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு,
அரண், ஆறும்
உடையான் அரசருள் ஏறு ’

என்னும் உயர்ந்த லக்ஷணங்களைக் கொண்ட நாடாகவே திகழ்ந்தது. ஆதலால், தன் முழு வலிமையுடனும் வீராவேசத்துடனும் நாசியைத் தாக்க முற்படும்போது, ருஷ்யா முழு வெற்றியடைந்ததில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை.

பனிக் காலமும் படைக் கோலமும்

1942-வது வருஷம் ஜூன் மாதம் 22-ம் தேதியிலிருந்து டிஸம்பர் மாதம் 6-ம் தேதி வரைக்கும், ருஷ்யாவில் ஹிட்லரின் முற்போக்கும் வேகமும் முற்றுப் புள்ளி இல்லாமல் போய்க் கொண்டிருந்தன. ருஷ்யாவின் தலை நகரான மாஸ்கோவின் முப்பதாவது மைல் வரை, நாசிப்படை நெருங்கி விட்டது. லெனின் கிராட் என்ற மற்றொரு நகரம் முற்றுகை இடப்பட்டது. இவ்விதம் நெருக்கடி வலுத்தது. ஆனால் திடீரென ஸ்டாலினின் சிறந்த படை வீரர்கள் திரண்டு சென்று நாசியரைத் தாக்கவே, நாசியர் ஓட ஆரம்பித்தனர். பனிக்காலமும் ருஷ்யரின் படைக்கோலமும் சேர்ந்து தாக்கவே, ஹிட்லரின் படைகள் பின் வாங்கின. ஓட்ட மெடுத்தன. அப்போது எடுத்த ஓட்டம் 1942 வருஷம் கோடைக்காலம் வரை நிற்க வில்லை. அதன்பின் அக்கோடை காலம் முழுவதும் ஹிட்லரின் கை மீண்டும் ஓங்கலாயிற்று. இரண்டாம் முறையாக நாசியர்

படை ருஷ்யர்களை அதிவேகமாய்த் தாக்கிச் சென்றன. அதுவே கடைசி முறையாகவும் மாறிவிட்டது. ஸ்டாலின்க்ராட் என்ற ஸ்தலம், நாசியரால் முற்றுகை இடப்பட்டது. நீண்ட நாட்களாகக் கடும் போர் இரு திரத்தார்க்கும் மூண்டு நடந்தது. முடிவில் ஸ்டாலின்க்ராட் முற்றுகை எடுபட்டது. நாசியரை ருஷ்யர் முறியடித்தனர். அன்று தேங்கிய ஜர்மனிப் படை இன்று வரை தேய்ந்து வந்துள்ளது. அன்று ஓங்கிய ருஷ்யரின் வீரம், இன்று வரை உயர்ந்து நன்மை பயந்து வருகின்றது. இன்றைக்கு, முடிவாக, ருஷ்யாவின் பிரதேசத்தில், ஓரிரண்டு இடங்கள் தவிர, மற்றெங்கும் கைதியாக்கப்பட்ட ஜர்மானியரைத் தவிர, வேறு படைதாங்கிய நாசியர், நடை தாங்கி, நிற்பதற் கின்றி, விரட்டுப்பட்டு விட்டனர். ஏறக்குறைய 2,000 மைல்கள் தென் வடக்கிலும் 300 மைல்கள் மேல் கிழக்கிலும் உள்ள விஸ்தீரணத்தில் இருந்த நாசிப் பகைவராகிய எதிரிகள், சிதறி ஓடிவிட்டனர். ருஷ்யாவி லிருந்து நாசியரை முழுதும் வெளியேற்றியதுடன், அவர்கள் நிற்கவில்லை. போலந்திலும். ருமேனியாவிலும் புகுந்து சண்டைசெய்து நாசியரை அழித்து வருகின்றனர். ருஷியாவைக் கைப்பற்றிக் குஷியாக இருக்கக் கனவு கண்ட ஹிட்லராகிய அல்நாஷர், அந்த அல்நாஷர் கதியையே யடைந்தான். க்ளக்ஸ்ரிட்ஸ் கூறியபடி, ருஷ்யாவை யாரும் படை எடுத்துக் கைப்பற்றுவ தென்பது முடியாது. நெப்போலியன் முயன்முன், தோற்முன். இப்போது ஹிட்லர் முயன்முன் ; இவனும் தோற்முன். இந்த முடிவு எதிர்பாராததல்ல. 'ருஷ்யாவும் ஜர்மனியும் நட்புக் கொண்டவுடன் போர் மூளும். அப்போரின் முடிவு ஜர்மனியின் அழிவு' என்று மெய்ன்காம்பில் ஹிட்லரே முன்பு கூறியுள்ளான். அந்தோ ஹிட்லரே, உமது வாக்குப் பலித்து விட்டது. அட்டவணையின்படி நீர் இதுவரை செய்து முடித்ததில். உமது அழிவு காலம் தேடியது தான் சிறந்தது.

ரஷ்ய வெற்றிக்குக் காரணம்

ருஷ்யாவிலுள்ள 20 கோடி மக்களும் ஒரே முகமாக நின்று ஓயாது போரை நடத்தியதால் தான், ருஷ்யர்கள் வெற்றி பெற்றனர். இந்தப் போரில் முறையே, ஸ்டாலின், படைத் தலைவர்கள், ஆயுத சாலைத் தொழிலாளிகள், விவசாயிகள் பெண்கள், பிள்ளைகள், கொரில்லா யுத்த வீரர்கள், பத்திரிகைக்காரர்கள் இத்தகைய பலவித மக்களும் இடைவிடாது கண்ணிமை கொட்டாது முனைந்து வேலை செய்து வந்ததால் தான் இன்று ருஷ்யா இத்தகைய மகத்தான வெற்றியை யடைந்தது. அதன் வீரம் உலக முழுவதுக்குமே உதாரணமாகவும் ஒளி விளக்காகவும் விளங்குகின்றது.

முறை செய்து காப்பாற்றுபவராயும், காட்சிக் கெளியராயும், கடும்சொல்லர் அல்லராயும் அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், தூங்காமை, துணிவு. இவற்றை உடையவராயும் உள்ள ஸ்டாலின், செயற்கரும் செய்கை செய்யும் தீரராகிய வீரர். ருஷ்யாவின் அதிர்ஷ்டம் அவர் இன்று தலைவராக இருப்பதிலேயே புலனாகின்றது, இவரின் கீழ், பணி செய்து படைத் தலைவராய் நின்று போரை நடாத்தும் மக்களும், மாபெரும் உண்மை வீரர்கள் ஆவர். டிமோஷாங்கோ, வெட்டுட்டின் போன்ற படைத் தலைவர்களது ஊக்கமும் முயற்சியும் ஒப்பற்றவை. வெற்றிக்குக் காரணம் படைத் தலைவன் தான் என்னும் கருத்து, நெப்போலியனது மட்டும் அல்ல. 'நிலை மக்கள் சால உடைத்தெனினும் தானை, தலை மக்கள் இல்வழி யில்' என்று திருவள்ளுவரும் கொண்டுள்ள அக் கருத்துக்கு ருஷ்யப் படைத் தலைவரும் உதாரணமாவார்.

ருஷ்யர்கள் பழி வாங்குந் தன்மை

அடுத்த படியாக, ருஷ்யப் படை வீரர்கள் மற்ற ருஷ்யர்களைப் போலவே இவர்கள் அனைவரும் தம் நாட்டு எதிரிகளை அழித்தே தீருவ தென நெஞ்சில் உரம் கொண்டு நிமிர்ந்து போர் செய்தனர். தம் தேசத்து ஆண், பெண், குழந்தை இவர்களைச் சித்திரவதை செய்து, கற்பழித்துத் திக்கிரையாக்கி அட்டூழியம் செய்த அரக்கர்களாகிய ஜெர்மன் நாசியரைப் பழிக்குப் பழி வாங்கியே தீருவோம் என்று வஞ்சினம் கூறி, வாளை உருவிய வல்லவர்கள். ஆதலின் அவர்களது இயற்கையான தேச பக்தியும் தேக பலமும் தியாக புத்தியும், தெளிந்த வீரமும் இன்னும் அதிகமாகச் சுடர் விட்டு எரிய ஆரம்பித்தன.

'இழைத்தது இகவாமைச் சாவாரை
யாரே
பிழைத்த தொறுமகிற் பவர்'

என்ற வள்ளுவர் வாக்கும் இவர்களிடம் வலுவடையக் கண்டோம். மனிதனுக்கு மனிதன், ஒரு ருஷ்ய வீரன், ஒரு நாசியைக் காட்டிலும் உயர்வும் வீரமும் உடையவன் ஆவான். வீரா வேசத்துடன் அவன் தன் பகையைத் தாக்கும் போது, யமனும்கூட எதிர்க்க அஞ்சுவான்.

'கூற்றுடன்று மேல் வரினும், கூடி
எதிர்க்கும்
ஆற்றலதுவே படை'

என்ற லக்ஷணத்தை முழுதும் கொண்டவைகள் ருஷ்யப் படைகள். தோலாமை என்ற புகழை அது வரை நாட்டி வந்த நாசியற்கு, அப்பட்டம் எலாமையைக் காட்டி வென்ற பெருமை, ருஷ்ய வீரர்களையே சார்ந்ததாகும்.

தொழிலாளர் யுத்த முயற்சி

இவர்களுக்குச் சதா சர்வ காலமும் இடைவிடாமல் படைகளையும் பல்வகை ஆயுதங்களையும் செய்து உதவி அளித்து வந்த தொழிலாளர்களது ஊக்கமும் முயற்சியும் உலகத்திலேயே இணையற்றவையாகும். 24 மணி நேரமும் ஒவ்வொரு தொழிலாளியும் தனக்கு விதிக்கப்பட்டுள்ள பங்குக்குப் பலமடங்கு அதிகமாகச் செய்து முடிப்பதையே ஒரு விதமாகவும் வீரச் செயலாகவும் கருதிச் செய்து வந்தார். கூட்டுப் பண்ணைகளில் விவசாயம் செய்து வந்த கோடானு கோடி ருஷ்ய மக்களும். மாட்டுக்கு அதிகமாக, அனல் மனமுவந்து உழைத்து, போர் வீரர்கட்கு உணவுப் பொருள் விருத்தி செய்து, உதவி வந்தனர். இவர்களது உண்மை யுழைப்பும் வீரத்தைச் சார்ந்ததாகவே இருந்தது.

பெண்மணிகளின் பெரும் உழைப்பு

ருஷ்ய தேசத்துப் பெண்மணிகளைப் பற்றிக் கூறுவது எளிதன்று. மற்ற எந்த நேச தேசத்திலும், ருஷ்யப் பெண்களைப் போல் அவ்வளவு ஆவேசத்துடனும், ஆண்மையுடனும் போர்த் தொண்டு செய்யும் பெண்களைப் பார்த்தல் அரிது. விவசாயம், யந்திர உற்பத்தி, போர் 'வீரர்க்குச் சிகிச்சை முதலிய எல்லாத் துறைகளிலும் மும்முரமாக முனைந்து நின்று போர் செய்த வீரப் பெண்மணிகள் ருஷ்யாவில் சரித்திரம் இயற்றியுள்ளனர். ஆகாய விமான ஓட்டிகளாகவும் போர் செய்து ஆச்சர்யமான பல தியாகங்களைச் செய்தும், ருஷ்யப் பெண்மணிகள் தமது வீரத்துக்கு அரண் செய்துள்ளார்கள். ருஷ்ய தேசத்துக் குழந்தைகள் கூடப் போர்த் தொண்டில் ஈடுபட்டிருந்தன. நெருப்பணைக்கும் வேலையில் விருப்புடன் முனைந்து நின்று தொண்டு செய்த லக்ஷக் கணக்கான குழந்தைகளின் வீரமும் செப்புதற்கரிது. கடைசியாக, கொரில்லாச் சண்டை வீரர்களது கூட்டம். இவர்கள் அஞ்சா நெஞ்சும், ஆபத்தைக் கண்டு நகைக்கும் ஆண்மையும், கண்ட கண்ட இடங்களில் பகைவரைத் துண்டதுண்டமாக்கும் வீரமும், உடைய தனிப்பட்ட வீரர்கள். இவர்களால் ஜர்மனிப் படைகள் அடைந்த கஷ்ட நஷ்டங்கள், கணக்கில் அடங்கா.

ஒரு நூதன வீரன்

இவைகளுக்கு எல்லாம் மேலாக, பனிக்காலம் என்ற ஓர் நூதன ருஷ்ய வீரன், ஆபத்துக் காலங்களில் எல்லாம் ஆயுதமாகத் தோன்றி ருஷ்யாவிற்குப் பேருதவி செய்து வந்துள்ளான். 20 கோடி மக்களும் 20 கோடி வீரர்களாகவே திகழ்ந்தனர். பகைவர் மீது அவர்கள் நெஞ்சில் எரிந்த கோபாக்கினியின் வேகம் ருஷ்யர்களது வீரத்தை விருத்தி செய்து என்ஜினைப் போல் உந்தியது. இவர்களது வீரத்தால் லெனின்க்ராட் நீண்ட கால முற்றுகை நீக்கப்பட்டது. மாஸ்கோ நகரம் காப்பாற்றப்பட்டது. உலக சரித்திரத்தில் பிரதானம் பெற்றுள்ள சிலவற்றுள் ஸ்டாலின்க்ராட் முற்றுகையும் ஒன்றாகும். மாரதான், வாடர்லூ, ஆஸ்டர்லிட்ஸ், ட்ரபல்கர், எல்அலமீன் ஆகியவற்றைப் போன்றதாகும் ஸ்டாலின்க்ராட். கடும்போர் மூண்டு அந்த ஸ்தலம் கனல் விட்டு எரியும்போதும், அதனுள் இருந்த ஒவ்வொரு ஆண், பெண், குழந்தையாகிய ருஷ்யரின் உள்ளங்களிலும் வீரத் தழல் கனல் விட்டு எரிந்தது. ஒவ்வொரு தெருவும் ஓர் போர்க் களம். ஒவ்வொரு வீடும் ஒரு கோட்டை. கைக்கெட்டியதெல்லாம் ருஷ்யருக்குக் கனத்த ஆயுதங்களாயின. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் அல்லவா? எ.'.கு மார்புகளால் இடிக்க முடியாதபடி எழுப்பிய சுவரால் ஸ்டாலின்க்ராட் நகரை இரவு பகலாய் அரண் செய்து காத்தனர் ருஷ்ய மக்கள் அனைவரும்.

(11-ம் பக்கம் பார்க்க)

எப்பொழுது சிரிக்கலாம்?

'இது என்ன கேள்வி? சிரிப்பதற்கு நேரம் உண்டா என்ன? சிரிப்பு வந்தால் சிரிக்க வேண்டியது தானே?' என்று நீங்கள் கேட்கலாம். சிரிப்பதற்கும் நேரம், காலம் எல்லாம் உண்டு. நடு ராத்திரியில் அக்கம்பக்கத்தார் அயர்ந்து தூங்கும் பொழுது, கடகடவென 'அவுட்' சிரிப்புச் சிரித்தால், அயலாரில் துணிச்சலாக உள்ளவர்கள், ஆத்திரத்தோடு கத்த மாட்டார்களா? அதிகாலையில் எழுந்து சிரிப்பதும் கூடாது என்பார்கள். அவ்வாறு செய்தால், அன்றைப் பொழுதிலே அழவேண்டிய சந்தர்ப்பமும் ஏற்பட்டு விடும் என்பார்கள். ஒரு துக்ககரமான சம்பவம் நடந்த இடத்திலே போய் உட்கார்ந்து கொண்டு, கலகலவெனச் சிரிப்பது அழகா? இம்மாதிரி, 'கூடாது, கூடாது' என்ற பதில்கள் மேற் கண்ட கேள்விகளுக்கு வருவதால், சிரிப்பதற்கென்று ஒரு நேரம் உண்டு என்றேற்பட வில்லையா?

'ஒருவன் அநுபவித்துச் சிரிக்க வேண்டுமென்ருல், கடைசியிலே தான் சிரிக்க வேண்டும்' என்று அர்த்தப்படும் படியாக ஒரு ஆங்கிலப் பழமொழி கூட இருக்கிறது. ரொம்ப உண்மையான பழமொழி. முதலில் அவசரப்பட்டுச் சிரிப்பவன் கடைசியில் அழவேண்டித் தான் வரும்; முதலில் எல்லாம் கஷ்டங்களைச் சகித்துக் கொண்டு, நடப்பதை யெல்லாம் நிதானமாகப் பார்த்திருப்பவன், முடிவிலே நல்ல பலனடைந்து மனமகிழ்ச்சி யடைவான். முன்ருல் சிரித்தவர்கள் எதற்காகச் சிரித்தார்கள்? அவர்கள் ஏதாவது ஹாஸ்யமாகப் பேசினுர்களா? ஏதாவது தவறுகள் செய்தார்களா? என்பதை யெல்லாம் கவனித்துக் கொண்டே யிருந்து, கடைசியில் சிரிப்பவனுக்கு நல்ல சிரிப்பு வரும்—இப்படியெல்லாம் மேற் கண்ட பழமொழிக்கு வியாக்யானம் சொல்லலாம்.

பழமொழி ஏன்?

தற் சமயம் இந்தப் பழமொழியைப் பிடித்து இழுத்ததற்குத் தகுந்த காரணம் இல்லாமலில்லை. நேச தேசத்தாருக்கு விரோதிகளாக உள்ள அச்சு நாட்டார், தாங்கள் இந்த இரண்டாவது உலக மகா யுத்தத்தை ஆரம்பித்ததையும், உலகிலே பல பாகங்களில் ரத்த வெள்ளம் ஓடுவதையும், அங்கெல்லாம் தங்களைச் சேர்ந்தவர்கள் போய்க் கூத்தாடுவதையும் நினைத்து நினைத்து அளவிலா ஆனந்த மடைந்தார்கள். தங்களுடைய சமர்த்தையும், நேச தேசத்தார் பட்ட அவஸ்தைகளையும் எண்ணி எண்ணிச் சிரித்தார்கள். தங்கள் ரேடியோக்களிலே புளுகல் புராணங்களை அவிழ்த்து விட்டு விட்டு, பேய்கள் போலச் சிரித்து, நேச தேசத்தாரை ஏளனமாகப் பேசினர். ஆனல், நேச தேசத்தாரோ சிரிக்கவே யில்லை. சென்ற நாலரை வருஷங்களாக பிரிட்டனும், சென்ற இரண்டே முக்கால் வருடங்களாக அமெரிக்காவும் தீரமாகவே போராடிக் கொண்டிருக்கின்றன. இந்த இரு நாட்டுத் தலைவர்களும், அவர்களைச் சேர்ந்தவர்களும் அவ்வப்பொழுது தங்கள் தேசத்தவர்களை எச்சரிக்கை செய்த வண்ணமாகவே தானிருக்கிருர்கள். சென்ற ஒரு வருஷத்திற்குள், நேச தேசத்தாரோடு சேர்ந்துள்ள ருஷ்யரும் சரி, நேச தேசத்தாரும் சரி, பிரமாதமான வெற்றிகளை யடைந்து, அச்சு நாட்டாரை அலற அடித்திருக்கிருர்கள்.

சாதிக்க வேண்டியவை பல

அப்பொழுது கூட, அவர்கள் சிரிக்க வில்லை. இன்னும் சாதிக்க வேண்டியவை ஏராளமாக இருக்கின்றன. நமது விரோதியின் சக்தி பூராவாக ஒடுங்க வில்லை. இப்பொழுது நாம் செய்திருப்பதெல்லாம் ஆரம்பக் காரியங்கள் தான். ஆகவே, இப்பொழுதே நாம் மகிழ்ச்சி யடையவோ, எதிரி படும் அவஸ்தைகளைப் பார்த்துச் சிரிப்பதோ, கூட்வே கூடாது. பூரண வெற்றி பெற்று, உலக சமாதானத்திற்கு உலை வைத்த அயோக்யர்கள் கூட்டம் உருவில்லாது அழிந்தொழிந்து, எங்கும் சமாதானம் திரும்பவும் நிலவத் தொடங்கி, ஊரிலே ஜனங்கள் நிம்மதியாகத் தங்கள் வேலைகளைப் பார்த்துக் கொண்டு நடமாட ஆரம்பித்த பிறகு, சாவதானமாக அமர்ந்து, அச்சு நாட்டார் என்னென்ன ஆட்டங்கள் ஆடினுர்கள்; முடிவிலே என்ன ஆயிற்று என்று கேள்வி கேட்டு விட்டு, அவற்றிற்குக் கிடைக்கும் பதிலை எண்ணி வேண்டிய மட்டும் சிரிக்கலாம். அப்புறம் நம்மைப் பார்த்து யாரும் சிரிக்கமாட்டார்கள் என்கிற முறையில் அவர்கள் உலகோருக்கு உபதேசம் செய்து கொண்டுதானிருந்து வந்திருக்கிருர்கள். இது தான் புத்திசாலித் தனமான காரியம்.

நடந்தது என்ன?

இப்பொழுது பாருங்களேன் ஜப்பானியர் செய்வதை! அவர்கள் திருட்டுத் தனமாக இந்திய மண்ணில் காலடி எடுத்து வைத்து விட்டார்களாம். இம்பால், கொஹிமா, திமாபூர், ஸில்சார் ஆகிய இடங்களுக்குப் போகும் பாதைகளில் அவர்களுக்கு நிற்க இடங்கள் கிடைத்து விட்டனவாம். மலைகளுக் கருகிலேயே மறைந்திருந்து எலிகள் போல நடமாடி வருகிருர்களாம் அவர்கள். இதை ஜப்பானிய ரேடியோக்கள் பிரமாதப் படுத்திப் பேசுகின்றன.

இந்தச் சமயத்திலே, ஜப்பானியரை எதிர்க்க வென்று தென் கிழக்கு ஆசியப் படைகளுக்குத் தலைமைப் பதவியை ஏற்க வந்திருக்கிருரே லூயி மவுன்ட்பேட்டன் பிரபு, அவர் டில்லியிலே தமது காரியாலத்தை முதலில் அமைத்துக் கொண்டார். அங்கிருந்து கொண்டே, எதிர் காலத்தில் நடக்கவேண்டிய தென்ன? இந்திய நிலைமை எப்படி யிருக்கிறது? விரோதியின் பலம் எப்படி யிருக்கிறது? அவனை எங்கெங்கு போய்த் தாக்கினல் பலன் கிடைக்கும் என்பதை யெல்லாம் தெரிந்து கொண்டார். எதிர் காலத்திற்கான போர்த் திட்டங்களையும் வகுத்துக் கொண்டார். அந்தத் திட்டங்களில் உள்ளவற்றைச் செய்கையில் காட்ட வேண்டுமென்று தமது காரியாலயத்தை இலங்கைக்கு மாற்றிக் கொண்டார்.

புளுகல் புராணம்

நடந்தது இவ்வளவு தான்! இதைக் கேள்விப் பட்ட ஜப்பானியர், உடனே என்ன செய்தார்கள் தெரியுமோ? தங்கள் ரேடியோ ஸ்டேஷனுக்கு ஓடினுர்கள். 'ஜப்பானியரது மகத்தான வெற்றி! இந்தியாவிலே பிரிட்டிஷ், அமெரிக்க எதிர்ப்பு சீர் குலைந்து விட்டது. நம்மை எதிர்ப்பதற்காக அமர்த்தப் பட்ட பெரிய சேனுபதியே ஓட்ட மெடுக்கிருர் இலங்கைக்கு. அவரது படைகளின் நிலைமை மோசமாகிவிட்டது. கிழக்காசிய விடுதலைப் போரில் இது ஒரு ரஸமான கட்டம். நாம் போடுகிற போட்டிலே, நமது விரோதிகள் கதிகலங்கிக் கொணடிருக்கிருர்கள். ஹ! ஹ!! ஹ!!! என்று சொல்லிச் சிரித்தார்கள்.

சிரிக்க வேண்டியது யார்?

ஆனல் சிரிக்க வேண்டியவர்கள் யார்? ஜப்பானியரின் புளுகல் புராணத்தைக் கேட்டு நாமல்லவா சிரிக்க வேண்டும். உண்மை நமக்கல்லவா தெரியும்? ஜப்பானியர் மேற் கண்டவாறு சொல்லிச் சிரித்து ஓரிரண்டு நாட்கள் கூட ஆகவில்லை. அவர்களையே தூக்கி வாரிப் போடும் படியான சம்பவம் ஒன்று நடந்தது.

நேச தேசக் கிழக்காசிய சேனுபதி பலே காரியம் ஒன்றைச் செய்ய ரகசியமாக ஆக்ஞை யிட்டிருக்கிருர். அவருக்குக் கீழே உள்ளவர்கள் அந்த ஆக்ஞையை அற்புதமாக நிறைவேற்றி விட்டார்கள். அது என்ன விஷயம் தெரியுமா?

சாபாங் தாக்கப்பட்ட விந்தை

இலங்கைக்கும், சிங்கப்பூருக்கும் சரி நடுவே, சுமத்ரா தீவிற்கு வடக்கே சபாங் என்றொரு ஊர் இருக்கிறது. சென்ற இரண்டு வருடங்களாகவே அது ஜப்பானியர் வச மிருந்தது. இங்கே ஒரு விமானக் கூடம், கப்பல்களை ரிப்பேர் செய்வதற்கான இடங்கள், பெரிய துறை முகம், [illegible] பல சாலைகள் எல்லாம் இரு[illegible] இலங்கையிலிருந்து இந்த [illegible] ஆயிரம் மைல் து[illegible] சோமர்வில் என்பவர் [illegible]யில் ஒரு நேசப் படை செ[illegible] இந்த சபாங் என்ற இடத்தை, போன வாரம் பிரமாதமாகத் தாக்கிவிட்டு வந்தது. எதிரிகளுக்கு ஏகச் சேதமாம். துறை முகம், விமானக் கூடம், ஊர், கப்பல்கள் எல்லாம் பாழாயிற்ரும். இரண்டு மைல் உயரம் நெருப்புப் பற்றி எரிந்ததாம். நேசப் படையினருக்கு ஒரு சிறு காயம் கூடப் படவில்லையாம். இதைக் கேட்டுவிட்டு, நேச தேசத்தாரில் யாராவது கேலியாகச் சிரித்தார்களா?

இன்னும் சாதிக்கப்பட வேண்டிய மகத்தான காரியங்கள் பல இருக்கின்றன என்பது நமக்கு ரொம்ப நன்ருகத் தெரியும்.

அதனுல், நாம் அவசரப்பட்டு மகிழவோ, சிரிக்கவோ தயாராக இல்லை.

பெரிய வெற்றி !

சுமத்ரா தீவிற்கு வடக்கே உள்ள சபாங் துறைமுகம் தாக்கப்பட்டது நமக்கு ஒரு பெரிய வெற்றிதான். நேச தேசத்தாரின் கடல் பலம் இப்பொழுது எப்படியிருக்கிறது என்பதை உலகோருக்கும் முக்கியமாக ஜப்பானியருக்கும் இது நன்ருக எடுத்துக் காட்டும் என்பதில் சந்தேகமே யில்லை.

பஸிபிக் பிரதேசத்தில் தான் ஆபத்து இருக்கிறது, மேற்கே ஒன்றுமில்லை என்று ஜப்பானியர் எண்ணி யிருந்தால், அந்த எண்ணத்திலே, இந்தத் துணிகரமான தாக்குதல் மண்ணை வாரிப் போட்டிருக்கும்.

குடி முழுகி விடவில்லை

லூயி மவுண்ட் பேட்டன் பிரபு டில்லியிலிருந்து இலங்கையில் போய் தங்கச் சென்றதை ஜப்பானியர் கிண்டல் செய்தார்களே, இந்திய எதிர்ப்பு சீர் குலைகிறது என்று ; அவ்வாறு சொல்லி சில தினங்கள் ஆகு முன் இத்தகைய தொரு தாக்குதல் நடந்திருக்கிறது ; அதோடு, அஸ்ஸாம் எல்லையிலும் நேசதேசப் படையினர் பிரமாதமாக ஜப்பானியருக்கு ஒன்றும் விட்டு கொடுத்து விடவில்லை. ஜப்பானியர் இந்தியா மீது படை யெடுக்கத் தொடங்கி ஒரு மாதத்திற்கு மேலாகி விட்டது. மட மட வென முன்னேறி கொஹிமாவையும், இம்பாலையும் கைப்பற்றி விடலா மென்று எண்ணி யிருந்தார்கள் போலிருக்கிறது அவர்கள். ஆனுல், காரியம் அவ்வளவு சுலபமாக முடிய வில்லை. அவர்களால் சூழப்பட விருந்த ஒரு பெரிய படை, சாமர்த்தியமாக இம்பாலுக்குப் பின்வாங்கி இம்பாலின் பலததை அதிகப்படுத்தி விட்டது. கொஹிமாவை எதிரிகள் வெகு பலமாகத் தான் தாக்கிக் கொண்டிருக்கிருர்கள். அந்நகரை நன்ருக வளைத்துக் கொண்டு விட்டார்கள். ஆனுலும், அதனுள் சிக்கியுள்ள படைகள் பயப்படவில்லை. வெளியிலிருந்து நிச்சயமாக உதவி வரும் என்ற நம்பிக்கை அப் [illegible]க்கு இருந்தது.

[illegible]ிரம் !

[illegible]ம்பெனி இந்தியாவிற்கு வந்த [illegible]தே போல ஒரு சம்பவம் நடந்[illegible]னைவிருக்கிறதா ? ஒரு கோட்டையினுள்ளே பிரிட்டிஷ்-இந்தியப் படைகள் சிக்கிக் கொண்டுவிட்டன. விரோதிகள் அக்கோட்டையை முற்றுகை போட்டு விட்டார்கள். வெளியிலிருந்து கட்டாயம் உதவி வரும் என்ற நம்பிக்கையோடு உள்ளே யிருந்தவர்கள் போராடிக் கொண்டே இருந்தார்கள். ஆகாரம் எல்லாம் குறைந்து விட்டது. உள்ளே யிருந்த சுதேசிகள், கஞ்சியை மட்டும் குடித்து விட்டு, பாக்கி உணவை எல்லாம் பிரிட்டிஷ் துருப்புகளுக்குக் கொடுத்தனர். கடைசியாக எதிர் பார்த்த படியே, சென்னையிலிருந்து வீரர் கிளைவ் ஒரு பெரிய பட்டாளத்துடன் சென்று, வெளியிலிருப்பவர்களை உதைத்துத் துரத்திவிட்டு, உள்ளே இருப்பவர்களோடு போய்க் கலந்து கொண்டு, அவர்களது உள்ளங்கள் ஆனந்தத்தால் துள்ளிக் குதிக்கச் செய்தார்.

அதே போல !

அதே போல, இப்பொழுது, கொஹிமாவில் சிக்கிய படைகளுக்கு திமாபூரிலிருந்து உதவி பறந்து சென்றது. திமாபூர்-கொஹிமா ரஸ்தாவிலே எதிரிகள் இருந்தார்கள். அவர்களை யெல்லாம் அடித்து சமாளித்துக் கொண்டு, உதவிப் படை கொஹிமாவை அடைந்து, அங்கு ஏற்பட்ட எதிர்ப்பை யெல்லாம் உடைத் தெறிந்து விட்டு, உள்ளே போய்ச் சேர்ந்து விட்டதாம். கொஹிமாவைப் பற்றிய கதைகள் பூராவாக வெளி வர வில்லை. அவை வந்தால், இந்திய பிரிட்டிஷ் துருப்புகள் சாதித்துள்ள அசகாய சூரக் காரியங்கள் என்னென்ன என்பது தெரிய வரும்.

இந்தியரின் சாகசங்கள்

சென்ற வாரத்திலே சில ரஸமான தகவல்கள் வெளியிடப்பட்டன. ஒரு இடத்திலே பெரிய சேனுதிபதி காயமடைந்து விழுந்து விட்டாராம். உடனே உதவி அதிகாரிகளில் ஒருவராக இருந்த ஒரு பஞ்சாபி, துணிச்சலாக, பல வீரர்களைச் சேர்த்துக் கொண்டு, ஜப்பானியர் மீது பாய்ந்தாராம். அவரது முயற்சி நல்ல பலனை யளித்ததாம்.

ஒரு மராட்டிய ஹவில்தாருக்கு மார்பிலே பலமான காயமாம். வலி எப்படி யிருக்கும் என்று சொல்ல வேணுமா ? அகழியிலே கிடக்கிருர் அவர். ஆனுலும் அவர், தமது ஆட்களுக்கு, அவசியமான ஆக்ஞைகளை இட்ட வண்ணமாகவே இருந்தாராம்.

இம்மாதிரியாகவே ஒவ்வொருவரும் ஒரு பெரிய சூரராக விளங்கிக் கொண்டிருக்கும் பொழுது, மார்க்கெட்டிற்குள்ளே நாய் நுழைவது போல், சுலபமாக இந்திய நகரங்களுக்குள் எதிரிகள் நுழைந்துவிட முடியுமா என்ன ?

மழை வந்தால் ?

மழை காலம் அஸ்ஸாமில் ஆரம்பிக்க இன்னும் 15, 20 நாட்கள் தான் இருக்கின்றன. அதற்குள்ளாக தங்கள் நிலைமையை ஸ்திரப்படுத்திக் கொள்ள ஜப்பானியர் விரும்பக் கூடும். மழை என்ருல், யானைத் துதிக்கை பருமனில் அல்லவா அங்கு மழை கொட்டும். உலகிலேயே அதிக மழையைப் பெறும் பிரதேசம் அஸ்ஸாம் மலைப் பிரதேசம் தான். ஆகவே, அங்கு மழை காலம் ஆரம்பமாகி விட்டால், அப்புறம் ஒரு பருப்பும் வேகாது. மலைகளிலே உள்ள குறுகிய பாதைகளில், மண்ணும் கல்லும் சரிந்து கிடக்கும். சில இடங்கள் கரைந்தே போயிருக்கும்.

ஆனுல், ஜப்பானியருக்கு ஆயுதம், வெடி மருந்து, ஆகாரம் எல்லாம், சில நூறு மைல்களுக்கு அப்பால் உள்ள மத்ய பர்மாவிலிருந்து, இந்த மலைப் பாதைகள் வழியாகத் தான் வந்தாக வேண்டும். அது சுலபமான காரிய மல்ல. மழை காலம் என்ருல், நமக்கும் கஷ்டம் தான். ஆனுல், நமது படைகளுக்கு உதவி அனுப்புகிற விஷயத்தில், நமது நிலைமையில் கஷ்ட மொன்று மில்லையே.

ஏதோ அவ்வப்பொழுது இடைஞ்சல் செய்யும் வகையில், ஜப்பானியர் ஏதாவது செய்து கொண்டிருக்கலாம். இந்த அழகிலே, அவர்கள் நம்மவர்களைப் பார்த்துக் கேலி செய்கிருர்கள் என்ருல், நமக்குச் சிரிப்புத் தான் வருகிறது. ஆனுல் சிரிக்கிருேமா ? இப்பொழுது சிரிக்கவில்லை. சிரிப்பதற்கான காலம் வேறே இருக்கிறது. அது கடைசியில் வரும். அப்பொழுது சிரிப்போம்.

அவர்களைப் போலவே இவர்களும் !

இப்போதைக்கு ஜப்பானியரையே சிரிக்க விட்டிருப்போம். ஜெர்மானியர் முதலிலே கொம்மாளம் கொட்டவில்லையா ? மார் தட்டவில்லையா ? தொண்டை கிழியக் கத்தவில்லையா ? எல்லாம் இப்பொழுது எப்படி யாச்சு ? ஆரம்பச் சிரிப்பெல்லாம் அழுகையாகி யிருக்கிறது. அவர்களோடு சேர்ந்தவர்கள் தானே ஜப்பானியரும் ? அவர்களுக்கு ஏற்பட்ட கதி இவர்களுக்கும் ஏற்பட வேண்டாமா ? ஏற்படும், ஏற்படும். பார்க்கத் தான் போகிருேம் அதை. அப்பொழுது சிரிக்கலாம்.

இப்பொழுது சபாங் துறைமுகம் தாக்கப் பட்டதில் பல விஷயங்கள் தொக்கி யிருக்கின்றன. நேச தேசத்தாரின் கிழக்காசியப் படைத் தலைவரின் பெரிய திட்டம் அமுலுக்கு வரத் தொடங்கி விட்டது என்பதை இது காட்டுகிறது. இப்படியே சபாங் போன்ற இடங்களில் ஏதாவது ஓரிரண்டைப் பிடித்துக் கொண்டுவிட்டால், சிங்கப்பூருக்கும், மலேயாவிற்கும் வெகு அருகில் நாம் போய்ச் சேர்ந்து விடுவோம். அப்புறம், ஜப்பானியக் கடற் படை வெகு காலம் உள்ளே பதுங்கிக் கொண்டிருக்கவும் முடியாது. இந்தியா அருகே வந்து வாலாட்டவும் முடியாது. ஆனுல், என்ருவது ஒரு நாள் அது நமது கப்பற் படையிடம் சிக்கிக் கொள்ளத் தான் போகிறது. ஒரு வேளை அது, ஜப்பானுக்கு ஓடிப் போய், அசல் ஜப்பானைக் காப்பாற்ற சித்தமாகிவிடலாம். அப்படி ஓடினுல் நாமென்ன செய்வது ? நமக்கு அவசரமில்லை. நாம் மெதுவாகப் போய்த் தான் பிடித்து உதைக்க வேண்டும் அதை.

பல வர்ணனைகள்

சபாங் துறைமுகம் தாக்கப்பட்டதைக் குறித்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக வர்ணிக்கிருர்கள். ஒருவர் சொல்கிருர் : ‘ஜெர்மனியைத் தோற்கடித்த பின் தான், ஜப்பானியர் விஷயத்தைக் கவனிப்பார்கள் என்றிருந்த அபிப்பிராயம், இது, காரணமாக மாறி யிருக்கும் என்று, மத்யதரைக் கடல் பிரதேசத்திலே, நேசப் படைகள் போட்ட போட்டின் பலன் இது ; இத்தாலி பல்டி அடித்ததால், இத்தாலியக் கப்பற் படையும், மத்ய தரைக் கடலில் இருந்த பல கப்பல்களும், நேச தேசத்தாருக்கு மிச்ச

மாயின; அவை இப்பொழுது இந்தியக் கடல்களுக்கு இடம் மாறி வந்திருக்கின்றன. அது காரணமாக, இங்குள்ள கடல் பலம் வெகுவாக உயர்ந்து விட்டது என்கிறார் ஒருவர்.

அதற்கு பதில் இது!

அதெல்லாம் இல்லை. முன்பு பெர்ல் துறை முகத்தை யுத்த ஆரம்ப தினத்தன்று ஜப்பானியர் திடுதிப்பென்று போய்த் தாக்கி, படு சேதம் விளைவித்தார்களே, அதற்கு பதிலய்யா இது! அப்படியே இல்லாவிட்டால், இலங்கையை வந்து முன் பொரு தடவை தாக்கினார்களே, அதற்கு நாம் அளித்த பதிலாகவும் இதைக் கொள்ளலாம் என்கிறார் மூன்றாமவர்.

இந்த சபாங் துறைமுகத்தைத் தாக்கிய பொழுது, ஜப்பானியரது எதிர்ப்பு இல்லாமலில்லை. ஆனாலும், நமக்குச் சேதமே இல்லை. ஜப்பானிய டார்பீடோ விமானங்கள் புறப்பட்டனவாம் நம்மவர்களைத் தாக்க. ஆனால் அவை நமது கப்பல்கள் இருந்த இடத்திற்கு இருபது மைல் தூரத்திற் கப்பாலேயே 'க்ளோஸ்' செய்யப்பட்டனவாம்.

சோமர்வில் கதை

இந்தத் தாக்குதலை நடத்தியவர் சோமர்வில் என்பவர். பலே கைக்காரர் அவர். போன யுத்தத்தில் போராடிவிட்டு, 'ரிடயர்' ஆன புள்ளி அவர். அவரைத் திரும்பவும் பட்டாளத்திலே சேர்த்துக் கொண்டார்கள். 'பிஸ்மார்க்' என்ற பெரிய ஜெர்மன் கப்பலை நொறுக்கி, டங்கர்க்கிலிருந்து நேச தேசத்தார் வெளி யேறிய போது, பல தீரச் செயல்களைப் புரிந்து விட்டு, இப்பொழுது ஜப்பானியர் தலையிலும் சரியான குட்டாக வைத்திருக்கிறார் இவர். இந்தத் தாக்குதலால், ஜப்பானியர் திகிலடைந்து போயிருப்பார்கள்.

நியூ கினியாவிலே!

இதோடு விட்டதா? அவர்களைத் திகில் படுத்தித் திணறும்படி செய்ய இன்னும் எத்தனையோ காரியங்கள் நடக்கப் போகின்றன. போன வாரம், நியூகினியா தீவிலே, திடீரென்று நூற்றைம்பது மைல் நீளமுள்ள போர் முனையொன்றை ஜெனரல் மாக் ஆர்தரின் படைகள் சிருஷ்டித்து விட்டன. அந்தப் பிரதேசத்திற்குக் கிழக்கே, வேறு சில இடங்களை அமெரிக்க விமானங்கள் முதலில் தாக்கி யிருக்கின்றன. சரி, அங்குதான் அமெரிக்கர்கள் வந்து இறங்கப் போகிறார்கள் என்று ஜப்பானியர் எண்ணி ஏமாந்தார்கள். திடீரென்று அமெரிக்கப் படைகள் ஹாலந்தியா, ஐடேப்போன்ற இடங்களில் போயிறங்கி, எழெட்டு மைல்கள் முன்னேறி விட்டார்களாம். இதனால் சுமார் ஒரு லக்ஷம் ஜப்பானியர், நமது இதர படைகளின் தொடர்பை இழக்கப் போகிறார்கள். ஹாலந்தியா நகரம் அமெரிக்கர் வசமாகிவிட்டது. இந்தப் பிரதேசம் ஏற்கெனவே டச்சுக் காரர்களிட மிருந்தது. இப்பொழுது மாக் ஆர்தரின் படைகளோடு டச்சு அதிகாரிகளும் வந்திருக்கிறார்களாம். அவர்கள் தங்களுடைய பழைய நாட்டை ஆளப் போகிறார்களாம்.

ஒரு தமாஷ்

இந்தப் படையெடுப்பிலே, ஒரு தமாஷ். நியூ கினியாவில் இந்தப் பிரதேசத்தில் சிக்கிக்கொண்ட ஜப்பானியப் படைகள் தான் ஆஸ்திரேலியா மீது படையெடுப்பதற்காகக் கொண்டுவரப்பட்டவை. இப்பொழுது அவை உதைபட்டுப் போகின்றன. பிலிப்பைன் தீவிலே பாடான் நகரத்தை ஜப்பானியர் சூழ்ந்து நாசமாக்கி, பலரைப் பலியாகக் கொண்டதற்கு இப்பொழுது பதில் சொல்லப் போகிறார்கள். அவர்கள் நேசப் படைகளை எதிர்க்கக் கூடும். ஆனாலும் அந்த எதிர்ப்பு பயன்படப் போகிறதா என்ன? பிலிப்பைன்ஸைத் தாக்கும் தூரத்தில் உள்ள விமானக் கூடங்களை அமெரிக்கப் படைகள் சீக்கிரமே பிடிக்கக் கூடும். அப்புறம் ஜப்பானியருக்குப் புதுத் தலைவலி ஆரம்பமாகும்.

தற்சமயம், ஜப்பானியரிடமுள்ள ட்ருக் துறைமுகம் தினம் அறைவாங்கிக் கொண்டிருக்கிறது. அமெரிக்காவிலே நூற்றுக் கணக்கிலே விமானந் தூக்கிக் கப்பல்களைச் சிருஷ்டித்துக் கொண்டிருக்கிறார்கள். அவற்றைக் கொண்டு, ஜப்பானியக் கரையையே தாக்க முடியும் என்கிறார் ஒரு அமெரிக்க அதிகாரி. ஜப்பானியர் எங்குமே தைரியமாக நடமாட முடியாத நிலைமை ஏற்பட்டுக் கொண்டு வருகிறது.

ஹிட்லர் கெஞ்சுகிறார்

இந்த லக்ஷணத்திலே அவர்களைப் பார்த்து, 'எங்களுக்கு உதவுங்களய்யா!' என்று ஹிட்லரும், முஸோலினியும் கேட்டுக் கொண்டிருக்கிறார்களாம். சிரிப்பு வருகிறதல்லவா இதைக் கேட்கும் பொழுது? இப்பொழுது சிரிக்க வேண்டாம்.

ஹிட்லரும், முஸோலினியும் ஹிட்லரின் ரகசிய வாச ஸ்தலத்தில் சந்தித்து, இந்த கோர யுத்தத்தை இன்னும் தொடர்ந்து நடத்துவது என்று தீர்மானித்த தோடு, நேச தேசத்தாரின் இரண்டாவது போர் முனை ஸ்தாபிக்கப்பட்டால், அதை எப்படிச் சமாளிப்பது என்பது பற்றியும் முடிவு கட்டினார்களாம்.

ஹிட்லருக்கு முடிவுகட்ட

இதே சமயம் அவர்களுக்கு முடிவு கட்ட சீமையில் ஏற்பாடுகளாகிக் கொண்டிருக்கின்றன. ஜெர்மனியின் விமான உற்பத்தியையும், விமான பலத்தையும் ஒடுக்க, ரொம்ப கணக்காகத் திட்டம்போட்டுக் கொண்டு, ஆயிரக் கணக்கான விமானிகள் தினம் ஜெர்மானிய, பிரஞ்சு நகரங்களில் உள்ள தொழிற் சாலைகளைத் துவம்சம் செய்து வருகிறார்கள். அதோடு, ஜெர்மனியைப் பிடித்த பிறகு, அதை எவ்வாறு மூன்று பங்கு போட்டு, எந்தெந்தப் பங்கை பிரிட்டன், ருஷ்யா, அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளில் எதெது ஏற்றுக் கொள்வது, ஆஸ்திரியாவை எப்படிப் பங்கு போடுவது என்றெல்லாம் ஈடன் துரையும், அமெரிக்காவிலிருந்து வந்துள்ள ஸ்டெட்டினஸ் துரையும் கலந்து பேசி முடிவு கட்டிவிட்டார்களாம். இனி படையெடுக்க வேண்டியது தான் பாக்கி. எப்ரல் முடிவிற்குள் அல்லது மே மாசத்திலே, ஐரோப்பா மேற்கிலிருந்து படையெடுக்கப்படும் என்று எதிர் பார்க்கிறார்கள். ருஷ்யர்களும் அப்பொழுது ஒரு போடு போடக் கூடும். அதற்காகவே அவர்கள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது. அதனாலே தான், ருஷ்யப் போர் முனையில் மந்தமேற்பட்டிருக்கிறாப் போலிருக்கிறது.

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய் வேல் பறியா நகும்"

என்ற வீரக் காட்சியின் விசித்திரக் கோலங்களை ஸ்டாலின்க்ராட் ருஷ்யரிடம் வெகு விநோதமாய்க் கண்டோம். இத்தகைய போர் வேறெங்கேனும் கண்டதில்லை. இறுதியில் ஹிட்லரின் படை முறியடிக்கப்பட்டது. ஓட்டம் எடுத்தது. ஸ்டாலின்க்ராட் காப்பாற்றப்பட்டது. ஸ்டாலின் புகழ் போற்றப்பட்டது. அந்த அதி உன்னத வீரப் பரிமளிப்பு ருஷ்யாவைக் காத்தது; உலகையும் காப்பாற்றிற்று. ஸ்டாலின்க்ராட் வீரமக்கட்கு வெகுமானமாக ஒரு பொன் வாளை நமது ஜார்ஜ் மன்னர் மனமுவந்து பரிசளித்தார்.

ருஷ்யரை வணங்குதல் வீரத்தையே வணங்குவதாகும்.

இத்தகைய ருஷ்ய வீரத்தைப் போற்றாத வீரரும், புகழாத தேசமும் இப்பூவுலகில் இல்லை. சர் ஜார்ஜ் வார்ட்லா மில்னி என்பவர், "ருஷ்யா மட்டும் இல்லாதிருந்தால் நம் கதி என்ன வாயிருக்குமோ, கடவுளுக்குத் தான் வெளிச்சம்" என்று வியந்துள்ளார். ஹென்றி ஜான்சன் என்னும் மற்றொரு பெரியார் கூறுவதாவது: "ருஷ்ய மக்கள் அனைவரும் வீரமே உருவாய் விளங்குகின்றனர். ருஷ்யரை வணங்குதல், வீரத்தையே வணங்குவதாகும்."

இத்தகைய வீரர்களால் இதுவரை தோல்வியடைந்த நாசிப் படைகள், இனியும் அழிந்தொழிவது திண்ணம். வீர லக்ஷ்மியின் பூரண கடாக்ஷத்தை வெகுவாக அடைந்து, வெற்றிமாலை சூடி, உலகையும் தம்மையும் காக்கும் ருஷ்ய வீரர்கள் வாழ்க! அவர் தம் ஒப்புயர்வற்ற செப்பரும் தலைவர் தீரர் ஸ்டாலின் வாழ்க!

—அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து எப்ரல் மாதம் 21-ம் தேதி ஒலிபரப்பப்பட்ட பிரசங்கம்.

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும் ஜெர்மனியும்.

ஏப்ரல் 19.—நேற்றிரவு பிரிட்டனைத் தாக்கிய 19 ஜெர்மன் விமானங்கள் நாசமாக்கப்பட்டன.

ஏப்ரல் 20.—தன் படைகளுக்கு கோபாங் ஒரு வேண்டு கோள் விடுத்திருக்கிறார்.

ஏப்ரல் 21.—எதிர் காலத்தில், பிரிட்டனுக்கும் குடியேற்ற நாடுகளுக்கும் இருக்க வேண்டிய சம்பந்தங்களைக் குறித்து காமன்ஸ் சபையில் விவாதித்தனர்.

எலிசெபெத் அரசிளங் குமரியின் 18-வது பிறந்த நாள்.

யுத்தமும் எதிர் கால சமாதானமும் என்பது பற்றி அமெரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகரான வைக்கௌண்ட் ஹலிபாக்ஸ் ஒரு அறிக்கை விடுத்தார்.

ஏப்ரல் 20.—ஏப்ரல் மாதக் கடைசியில் தாம் தாக்கப்படலா மென்று ஜெர்மன் இராணுவப் பிரமுகர் ஒருவர் ஹேஷ்யம் சொல்லுகிறார்.

நேச நாட்டுப் படைகள் மேற்கு ஐரோப்பாவில் தாக்கும் போது, இத்தாலியிலும் மீண்டும் தாக்கக் கூடு மென்று ஜெர்மன் படைத் தலைவர் எதிர் பார்க்கிறார்.

இங்கிலாந்திலிருந்து வெளி நாடுகளுக்கு எங்கு வேண்டுமானாலும் போகலாமென்ற அனுமதி வியாழக்கிழமை முதல் ரத்தாகி விட்டது.

அமெரிக்காவும் அட்லாண்டிக்கும்.

ஏப்ரல் 19.—அடுத்த ஜூலைமீ முதல் 1 வருஷ காலத்திற்கு குத்தகைக் கடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்வதற்கு அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட்டிற்கு பிரதிநிதிகள் சபையார் அநுமதி கொடுத்திருக்கிறார்கள்.

ஏப்ரல் 20.—மத சம்மந்தமாகவும் கலைகள் சம்மந்தமாகவும் உள்ள ஞாபகச் சின்னங்களை இனி அழிக்கப் போவதில்லை என்று டீவேலராவுக்கு தலைவர் ரூஸ்வெல்ட் அறிவித்திருக்கிறார்.

அமெரிக்க கப்பற் படைக்கு 3,264½ கோடி டாலர் ஒதுக்குவதை அமெரிக்க செனெட் கமிட்டி அங்கீகரித்திருக்கிறது.

அமெரிக்கப்படைக்கு 14 லக்ஷம் பேர் இந்த வருஷத்தில் தேவை இருக்குமென்றும், இது வரை 11 லக்ஷம் பேர் சேர்ந்து விட்டார்கள் என்றும் அமெரிக்க யுத்த மந்திரி குறிப்பிட்டார்.

ஏப்ரல் 21.—ஏப்ரல்மீ 7உ வரை சேதமான அமெரிக்கர்கள் 145,082 பேர்களில் 25,013 பேர்கள் தான் கொல்லப்பட்டார்கள் என்று அமெரிக்க யுத்த மந்திரி அறிவிக்கிறார்.

இந்தியா, பர்மா, இலங்கை.

ஏப்ரல் 19.—நேற்று மாங்டா, பிஜூடாங் ரோடில் நேச நாட்டு ரோந்துப் படைகள் தொடர்ச்சியாகப் போய்க் கொண்டிருந்தன.

மேன்மை தங்கிய இந்திய வைஸ்ராய் பிரபு அவர்கள் தலைமையில் நடைபெற்ற தேசியப் பாதுகாப்புக் கவுன்சிலில் யுத்த நிலைமை பற்றி மேன்மை தங்கிய இந்தியப் படைத் தலைவர் கூறினார்.

ஏப்ரல் 20.—வட பர்மாவில் **வாரசப்** என்னும் ஜப்பானிய கேந்திர ஸ்தானத்தை சீனப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ஏப்ரல் 21.—இம்பால் பட்டணத்திற்கு 30 மைல்களுக்கு வட கிழக்கே உள்ள இடங்களை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றிக் கொண்டு முன்னேறுகின்றன.

ஏப்ரல் 22.—கொகிமாப் பகுதியிலும் இம்பாலுக்கு வட கிழக்கேயும் நேச நாட்டினர் கை ஓங்கி இருக்கிறது. ஜப்பானியர்களுக்கு பெருத்த நஷ்டம். பிஷன்பூரை அடுத்து முன்னேற முயற்சிக்கும் ஜப்பானியர்களோடு கடுமையான யுத்தம் நடைபெறுகிறது.

ஏப்ரல் 24.—கொஹிமா—திமாப்பூர் ரஸ்தாவில் இப்போது தடை இல்லை. கொஹிமாவில் இருந்த படை பூரணமாக மீண்டு விட்டது.

இம்பாலுக்கு முப்பது மைல் தூரத்தில் உள்ள உக்ருல் என்னும் இடத்தில் நேச நாட்டுப் படைகள் போராடிக் கொண்டிருக்கின்றன. பிஷன்பூர் பகுதியிலும் கடும் போராட்டம் நடக்கிறது.

ரஷ்யாவும் பின்லாந்தும்.

ஏப்ரல் 19.—செபஸ்டபால் வெளி அரண்களுக்குள் சோவியத் படைகள் புகுந்து விட்டன. அந்தப் பட்டணத்தில் போராட்டம் நடை பெறுகிறது. அதில் தீ மூண்டு விட்டது.

ஏப்ரல் 20.—செபஸ்டபால் நகர வாயில்களை ரஷியப் படைகள் கடந்து விட்டன. கருங் கடலில் அடுத்துள்ள மெக்கன்ஷி மலைப் பகுதியை கைப்பற்றிக் கொண்டன.

ஏப்ால் 21.—நார்வாவைத் தாக்கிய ஜெர்மன் படைகளை, சோவியத் படைகள் விரட்டி யடித்தன.

ஏப்ரல் 22.—ஸ்டாலினிஸ் ரோட் பகுதியில் மார்ஷல் சுக்கோப்ஸ் படைகளை மணிக் கொருதரம் ஜெர்மன் டாங்குப் படைகள் கடுமையாகத் தாக்குகின்றன.

செபஸ்டபூலைச் சுற்றிலும் கடும் போராட்டம் நடை பெறுகிறது.

சோவியத் பின்லாந்து ஒப்பந்தம் முறிந்து போனது சம்மந்தமாக ஒரு அறிக்கை வெளியானது.

ஏப்ரல் 24.—எதிரிகளை சோவியத் விமானங்கள் தொடர்ந்து தாக்குகின்றன.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்திய தரைக் கடல் பகுதி.

ஏப்ரல் 21.—இத்தாலியிலுள்ள 6 கட்சி பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு மந்திராலோசனையை அமைத்திருப்பதாக மார்ஷல் படாக்ளியோ அறிவிக்கிறார்.

விஷி, சுயேச்சை பிரான்சு எதிரி வயப்பட்ட நாடுகள்.

ஏப்ரல் 19.—நேற்றிரவு பாரிஸ், ரோவென்டெர்ஜினியர் ஆகிய இடங்களை ஆயிரம் நேசநாட்டு வெடிகுண்டு விமானங்கள் தாக்கி 4,000 டன் வெடிகுண்டுகளை வீசின.

ஏப்ரல் 20.—பல்கேரிய ரயில்வே ஸ்தலமான புளோடிவை பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானங்கள் நேற்றிரவு தாக்கின.

நடு நிலைமை நாடுகள்.

ஏப்ரல் 19.—ஜெர்மனிக்கு துருக்கி சப்ளைகள் அனுப்பும் சம்மந்தமாக, ஆட்சேபித்து பிரிட்டனும் அமெரிக்காவும் அனுப்பிய கடிதங்களுக்கு துருக்கி அனுப்பி உள்ள பதில் திருப்திகரமாய் இருக்கின்றது.

ஜெர்மனிக்கு முக்கியமான பொருள்களை அனுப்புவதை நிறுத்தி விட வேண்டுமென்று இங்கிலாந்து அரசாங்கமும், அமெரிக்க அரசாங்கமும் செய்து கொண்ட கோரிக்கையை ஸ்வீடன் மறுத்து விடுமென்று தெரிகிறது.

ஏப்ரல் 20.—துருக்கியிலிருந்து ஜெர்மனிக்கு குரோம் அனுப்புவதை நாளை முதல் நிறுத்தப்படும்.

ஏப்ரல் 21.—ஜர்மனிக்கு குரோம் அனுப்புவதை நிறுத்தியது சம்மந்தமாக துருக்கி அரசாங்க சபையினர்க்கு அந்நிய நாட்டு மந்திரி ஒரு அறிக்கை வெளியிடுவார்.

ஏப்ரல் 22.—ஸ்வீடன் இங்கிலாந்துக்கும் அமெரிக்காவிற்கும் அனுப்பியுள்ள பதில் விரோதமானதாக இருந்தாலும் பணிவான முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

தூரக் கிழக்கு நாடுகள்.

ஏப்ரல் 19.—சுமத்ராவின் வட கோடியில் உள்ள சபாங், லோர்கா ஆகிய இவ்விரண்டிடங்களையும் நேசநாட்டு விமானப் படைகள் அட்மிரல் சர் ஜேம்ஸ் சோமர்வில் தலைமையில் தாக்கி எதிரிகளுக்கு பெரும் சேதத்தை விளைவித்தன.

ஏப்ரல் 20.—அலூசியன் தீவுகளில் அடேக் என்னும் சிறந்த கப்பல் ஸ்தலத்தை அமெரிக்கப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ஏப்ரல் 22.—நியூ கினியைச் சேர்ந்த ஹாலண்டியாவிற்கு மேற்கு ஒரு 1,000 டன் எதிரி சாமான் கப்பலை நேசநாட்டு ரோந்து விமானங்கள் மூழ்கடித்தன.

ஏப்ரல் 24.—டச்சு நியூ கினியைச் சேர்ந்த பெரிய ஜப்பானிய தலமான ஹாலண்டியாவை நேசநாட்டுப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

டாண என்னுமிடத்தில் அமெரிக்கப் படைகள் போய் இறங்கிவிட்டன.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.